
320

# பொன்னித் தமிழ் வாசகம்

## 3



320
3-58
OFFICE OF THE REGISTRAR OF ...
MADRAS
TB
031 (3)
N58
132048

ஜெ[illegible] கம்பெனி, கும்பகோணம்.

# பொன்னித் தமிழ் வாசகம்

(மூன்றும் வகுப்பு)

[1957-ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டப்படி தயாரிக்கப்பெற்றது]

320/3-58

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - '958
MADRAS

ஆசிரியர் :

வித்துவான் ஆ. துரைமாணிக்கம்,

தமிழாசிரியர்,

சிறிய மலர் உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம்.

*

ஜெனரல் புக் கம்பெனி

கும்பகோணம் : : சென்னை—1

முதற் பதிப்பு—1958
மறு பதிப்பு —1958

T9
U31,B20
N58

*Approved by the Madras Text Book Committee, for class use.*
*(Vide Page No. 5 Fort St. George Gazette dated 28-5-1958)*

Printed on 24 lbs. Double Crown White Printing.

137048

பதிப்புரிமை

விலை ரூ. 0-55

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

# முன்னுரை

அரசியலார் 25—12—1957ல் திருத்தி வெளியிட்டுள்ள "இணைக்கப்பெற்ற ஆரம்பக்கல்வி"யின் தமிழ்ப் பாடத்திட்டப்படி எழுதப்பெற்றுள்ள நூல் வரிசையில் மூன்றும் வகுப்புக்கென இப் புத்தகம் தயாரிக்கப் பெற்றுள்ளது.

தாய்மொழியைக் கற்பிப்பதில் புதிய பாடத் திட்டம் கொண்டுள்ள நோக்கம், முதல் ஏழு ஆண்டுகளில் மாணவர்கள் தாய்மொழியைப்பொருள் உணர்ந்து உணர்ச்சியுடன் பேசவும், பிழையின்றி எழுதவும் பயிற்சி பெறுவதோடு அடிப்படையான இலக்கண அறிவைப்பெற்று, அவற்றை மொழியிடைப் பிழையின்றிப் பயன்படுத்தவும், தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அறிவினை ஓரளவு பெறவும் பயிற்சி அளிப்பதாகும். இந்நோக்கங்களை மனத்திற் கொண்டு இந்நூல் வரிசைகள் எழுதப் பெற்றுள்ளன.

வாய்மொழிப் பாடங்கள் முதல் இரண்டு வகுப்பைத் தழுவி, மேலும் சற்று விரிவாக அமைந்து மாணவர்களின் நூலறிவை வளர்க்கும் வகையில் எழுதப் பெற்றுள்ளன. எழுநூற்றுக்கு மேற்பட்ட புதியசொற்கள் கையாளப்பட்டுள்ளன. உரையாடல்களும், சிறு நாடகப் பகுதியும் காட்டப்பட்டுள்ளன. சிறுகதைகள், புலவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள், விநோதக் கதைகள், பறவைகள், விலங்குகளைப் பற்றிய சிறு கதைகள் முதலிய முப்பது உரைநடைப் பாடங்கள் தரப்பெற்றுள்ளன. இடை இடையே பல செய்யுட் பாடங்கள் பாடத்திட்டத்தை ஒட்டி இணைக்கப் பட்டுள்ளன. மௌனப் பாடப் பயிற்சியும், மொழி

வளம் பெறுதற்குரிய வகையில் இலக்கணப் பயிற்சியும் எளிமையாகக் காட்டப் பெற்றுள்ளன.

இறுதியில் மாணவர் தகுதிக்கேற்ப வெற்றி வேற்கையில் இருபது செய்யுட்களும், மூதுரையில் பதினைந்து செய்யுட்களும், கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் பயிற்சிகள் தரப் பெற்றுள்ளன.

சிறுவர்கள் விரும்பிப் படிக்குமாறு அமைந்துள்ள இந்நூல் வரிசை நற்பயன் அளிக்கும் வண்ணம் தமிழன்னை அருள்புரிக!

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | மனிதருள் மாணிக்கம் | ... | 1 |
| 2. | தமிழ் நாடு | ... | 5 |
| 3. | தமிழ்த் திருநாடு | ... | 9 |
| 4. | மயிலுக்குப் போர்வை | ... | 10 |
| 5. | கோழி | ... | 14 |
| 6. | எல்லாரோடும் இணங்க முயலுதல் | ... | 18 |
| 7. | தொழிலாளிகள் | ... | 22 |
| 8. | கைத்தொழில் | ... | 26 |
| 9. | பொன் வாத்து | ... | 27 |
| 10. | எறும்பு | ... | 30 |
| 11. | துப்புரவு | ... | 34 |
| 12. | வீரர் சிதம்பரனார் | ... | 39 |
| 13. | ஒற்றுமை வேண்டும் | ... | 44 |
| 14. | கூண்டுக் கிளி | ... | 47 |
| 15. | பனிநில மக்கள் | ... | 48 |
| 16. | பண்டிகைகள் | ... | 52 |
| 17. | கடைத் தெரு | ... | 56 |
| 18. | சாலமன் அரசர் | ... | 60 |
| 19. | தென்னை மரம் | ... | 64 |
| 20. | சிரித்த முல்லை | .... | 68 |
| 21. | எதிர் இல்லா ஏற்றப் பாட்டு | ... | 69 |

| | | |
|---|---|---|
| 22. | ஏமாந்த திருடர்கள் | ... 71 |
| 23. | ஊராட்சி | ... 75 |
| 24. | நீராவியின் ஆற்றல் | ... 79 |
| 25. | மழை | ... 83 |
| 26. | கடிதம் எழுதுதல் | ... 84 |
| 27. | சாலை ஒழுங்கு | ... 86 |
| 28. | நாட்குறிப்பு | .... 90 |
| 29. | பழமொழிகள் | ... 92 |
| 30. | குமண வள்ளல் | ... 94 |
| 31. | வெற்றிவேற்கை | ... 98 |
| 32. | மூதுரை | ... 100 |

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—மகாகவி இரவீந்தரநாத தாகூர்

## தேசீய கீதம்

(பொருள்)

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீ தான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்

நின் திருநாமம், பஞ்சாப்பையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மகாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்
தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை உன் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.



# 1. மனிதருள் மாணிக்கம்

இந்திய நாட்டின் இணையிலாத் தலைவர்களில் அண்ணல் நேரு ஒருவர் ஆவார். இவரை நமது காந்தியடிகள் மனிதருள் மாணிக்கம் என்று போற்றிப் புகழ்ந்துள்ளார். இவரால் நமது பாரத நாடு பெரும் புகழ் அடைந்து வருகிறது.

அண்ணல் நேரு ஒரு செல்வக் குடியில் பிறந்தவர். இவரது இயற் பெயர் ஜவாஹர்லால் நேரு என்பது ஆகும். ஜவாஹர் என்ற சொல்லுக்கு மாணிக்கம் என்பது பொருள். இவர் பிற்காலத்தில் மனிதருள் மாணிக்கமாக விளங்குவார் என்று நினைத்துத்தான் இந்தப் பெயரை வைத்தார்கள் போல் தோன்றுகிறது.

நமது நேருவின் தந்தையார் பெயர் மோதிலால் நேரு; தாயார் பெயர் சொரூபராணி. இவருக்கு இரு தங்கைமார் உண்டு. நேரு அவர்கள் இளமையில் மிகச் செல்வமாக வளர்க்கப்பட்டார். நமது நாட்டில் வேண்டிய அளவு கல்வி பயின்றார். பிறகு, மேல் படிப்புப் படிப்பதற்காக இங்கிலாந்து சென்றார். அங்கு ஐந்து ஆண்டுகள் பயின்று, கல்லூரிப் படிப்பை முடித்தார். பின்னர், வக்கீல் படிப்புப் படித்துப் பாரிஸ்டர் என்ற பட்டமும் பெற்றார். அத்துடன் பல நாடுகளைப் பற்றிய செய்திகளையும் நன்றாகப் பயின்றார். அதனால் அவர் இன்று உலக அறிவும் பெற்று விளங்குகிறார்.

வெள்ளைக்காரர் ஆட்சியில் நமது நாடு அடிமைப் பட்டுக் கிடந்தது. மக்கள் சுதந்திரம் அற்று அடிமைகளாய் அல்லற்பட்டனர். மக்களின் சுதந்திரத்திற்காக அண்ணல் காந்தியடிகள் முதலான பல பெரியார்கள் அரும்பாடு பட்டனர். நமது நேரு அவர்களும் காந்தியடிகளின் தொடர்

யைப் பெற்ருர். அவரோடு சேர்ந்து வெள்ளைக்கார ஆட்சியை எதிர்த்துப் போராடினர். அதனல் அண்ணல் நேரு பலமுறை சிறையில் அடைக்கப் பட்டார். இவருடைய குடும்பமே விடுதலைப் போரில் ஈடுபட்டது.

பிறகு நமது நாடு சுதந்திரம் பெற்றது. அன்று முதல் நமது சுதந்திர நாட்டின் முதல் அமைச்சராக நேரு இருந்து வருகின்ருர். இவ ருடைய அரும் பணியால் நம் நாடு பல நன்மை களைப் பெற்று விளங்குகின்றது.

அண்ணல் நேரு அவர்கள் ஒரு பொதுநலத் தொண்டர்; எப்பொழுதும் நாட்டின் நலத்தையே நாடி வருபவர். சாதி வேற்றுமைகளை விரும்பாத வர். மூடப் பழக்க வழக்கங்களிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை. குழந்தைகளே நாட்டின் செல்வம் என்பது அவர் எண்ணம். அதனல் அவர் குழந்தைகளிடம் பேரன்புகொண்டு பழகுகிருர்.

நீங்களும் நேருவைப் போல் விளங்க வேண்டும். அவர் குணங்களை மேற்கொண்டு புகழுடன் வாழ்வீர்களாக.

| | | |
|---|---|---|
| இணையிலா | மாணிக்கம் | போற்றி |
| உத்தமர் | செல்வக்குடி | புகழ்ந்து |
| விளங்குவார் | கல்லூரி | பாரிஸ்டர் |
| பயின்ருர் | அல்லல் | தொடர்பு |
| ஆட்சி | எதிர்த்து | விடுதலை |
| அரும்பணி | சாதி வேற்றுமை | எண்ணம் |
| பொதுநலம் | நம்பிக்கை | மேற்கொண்டு |

## பயிற்சி

**1. வினுக்கள் :**

1. ஜவாஹர் என்ற சொல்லின் பொருள் என்ன ?
2. நேருவைக் காந்தியடிகள் எவ்வாறு போற்றினுர் ?
3. நேரு இங்கிலாந்து சென்றது ஏன் ?
4. நேரு அவர்களின் குணங்களே எழுது.
5. நேருவின் வாழ்க்கையிலிருந்து நீ என்ன தெரிந்து கொண்டாய் ?

**2. மொழி வளம் :**


***தமிழ் நமது தாய்மொழி*** ஆகும். இந்தத்தொடரைக் கவனி. இதில் நான்கு சொற்கள் இருக்கின்றன. இந்த நான்கு சொற்களும் தொடர்ந்து நின்று ஒரு முடிவான கருத்தைக் காட்டுகின்றன. இவ்வாறு சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு முடிவான கருத்தைக் காட்டுவது **வாக்கியம்** ஆகும்.

**'நாம் தாய் மொழியை நன்ருகக் கற்க'** ——— இந்தத் தொடரைக் கவனி. இங்கும் நான்கு சொற்கள் தொடர்ந்து இருக்கின்றன. ஆனுல், இவை ஒரு முடிவான கருத்தைக் காட்டவில்லே. இதனுல் இது வாக்கியம் ஆகாது.

முடிந்த கருத்தைக் காட்டும் ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஒரு புள்ளி (.) வைக்க வேண்டும். இதற்கு **முற்றுப் புள்ளி** என்று பெயர்.

# 2. தமிழ் நாடு

நாம் தமிழ்மொழி பேசுகிறோம். தமிழ் நமக்குத் தாய்மொழி. தமிழைத் தாய்மொழியாகக்




கொண்டவர்கள் தமிழர்கள். தமிழர்கள் வாழும் இடம் தமிழ்நாடு ஆகும்.

நம் தமிழ்நாடு இந்திய நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ளது. இது பழங்காலத்தில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிந்து இருந்தது. அவற்றை மூன்று தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் சேரர், சோழர், பாண்டியர் எனப்படுவர்.

சேரர்கள் ஆண்டது சேர நாடு. இப்பொழுதுள்ள கொச்சி, திருவாங்கூர்ப் பகுதிகளே அப்போது சேர நாடாக இருந்தது. சேர நாடு மலைகள் நிறைந்த நாடு. அந்நாட்டில் யானைகள் மிகுதி. செங்குட்டுவன் என்ற சேர மன்னன் சேர நாட்டு மன்னர்களில் சிறந்தவன். கண்ணகி கோவலன் வரலாறு உங்களுக்குத் தெரியும் அல்லவா? அந்த வரலாற்றைக் கூறும் நூல் சிலப்பதிகாரம் ஆகும். சேரன் செங்குட்டுவனுக்கு இளங்கோ அடிகள் என்ற ஒரு தம்பி உண்டு. அவர்தான் சிலப்பதிகாரத்தை எழுதியவர்.

சோழர்கள் ஆண்ட நாடு சோழ நாடு ஆகும். சோழ நாட்டில் காவிரியாறு பாய்கிறது. அதனால் சோழ நாடு நீர்வளம் நிறைந்திருக்கிறது. சோழ நாட்டில் உணவுப் பஞ்சம் இல்லை. "சோழவள நாடு சோறு உடைத்து" என்ற பழமொழியும் வழங்கப்படுகிறது. சோழ மன்னர்களில் ஒருவன்

இராசராச சோழன். இவனால்தான் தஞ்சையில் உள்ள பெரிய கோவில் கட்டப்பட்டது.

பாண்டியர்கள் ஆண்ட நாடு பாண்டிய நாடு. நீங்கள் மதுரைக்குச் சென்றிருக்கிறீர்களா? மதுரைதான் பாண்டிய நாட்டின் தலைநகராக விளங்கியது. மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. அந்தச் சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் கூடி தமிழ் மொழியை வளர்த்து வந்தார்கள். திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் இந்தச் சங்கத்தில்தான் முதன்முதல் படித்துக் காட்டப் பட்டது.

தமிழ் நாடு பழங்காலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கியது. தமிழ்நாட்டு மக்கள் பிறநாடுகளுக் கும் சென்று வியாபாரம் செய்தார்கள். கல்வியில் சிறந்த நாடாகவும் தமிழ் நாடு இருந்தது. திருவள்ளுவர், கம்பர் முதலான பெரும் புலவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்தார்கள். உலகப் புகழ் பெற்ற, நாடாகத் தமிழ்நாடு திகழ்ந்து விளங்கிற்று.

நம் நாட்டின் பழம் பெருமையை நீங்கள் நிலை நாட்டவேண்டும். நீங்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். உங்களால் நம் நாடு புகழ் பெற்றுச் சிறப்படைய வேண்டும்.

| | | |
|---|---|---|
| தாய்மொழி | தமிழ்நாடு | தென்கோடி |
| மன்னர் | சேரர் | சோழர் |
| பாண்டியர் | திருவாங்கூர் | இராச்சியம் |
| கொச்சி | வரலாறு | சிலப்பதிகாரம் |
| வளம் | உடைத்து | தமிழ்ச்சங்கம் |
| திருக்குறள் | பெருமை | பிறநாடு |

பயிற்சி

*1.* **வினக்கள்:**

1. தமிழர்கள் என்பவர் யார்?
2. தமிழ்நாடு பழங்காலத்தில் எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது?
3. சேரநாடு என்பது எது? அந்த நாட்டின் சிறப்பை எழுது.
4. பாண்டிய நாட்டின் சிறப்பைக் கூறு.
5. பழந்தமிழ் நாடு எவ்வாறு இருந்தது?
6. உன் கடமை என்ன?

2. ***மொழிவளம்:***

பின்வரும் தொடர்களில் வாக்கியம் எது? வாக்கியம் அல்லாதது எது? வாக்கியமானல் (√) என்று குறி; இறுதியில் முற்றுப் புள்ளியும் இடு; இல்லை என்ருல் (×) என்று குறி.

1. நாம் தமிழில் பேசுகிருேம் ( )
2. தமிழ்நாடு மூன்று பிரிவாக ( )
3. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதினர் ( )
4. சோழர்கள் ஆண்ட நாடு சோழ நாடு ஆகும் ( )
5. சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் தமிழை ( )
6. திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் ( )

# 3. தமிழ்த் திருநாடு

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 1

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே;—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த இந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா! 2

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்!
நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர். 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிரமுடைய நெஞ்சு வேணும்!—இது
வாழும் முறைமையடி பாப்பா! 4

—பாரதியார்



# 4. மயிலுக்குப் போர்வை

நம் பழந்தமிழ் நாட்டில் பல சிற்றரசர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் வள்ளல் பேகன் ஒருவன் ஆவான். வள்ளல் பேகன் என்பவன் ஆவியர் குடி என்ற பழங்குடியைச் சேர்ந்தவன்; பெருஞ் சிறப்பு வாய்ந்தவன். அதனுல் அவன் வையாவிக் கோப் பெரும் பேகன் என்று பெயர் வழங்கப் பட்டான்.

பழங் காலத்தில் நம் நாட்டில் வள்ளல்கள் பலர் வாழ்ந்து வந்தனர். யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று கூருமல், அவர்களுக்குக் கொடுத்து உதவுகிறவர்கள் வள்ளல் எனப்படுவார்கள். அவ்வள்ளல்களில் பிற்காலத்தில் சிறந்து விளங்கியவர்கள் ஏழுபேர். அவர்களைக் கடையெழு வள்ளல்கள் என்று சொல்லுவார்கள்.

வள்ளல் பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பழனி மலையைச் சேர்ந்த பகுதி பொதினி மலைச்சாரல் என்று கூறப்படும். அப்பகுதியை ஆண்டவன் பேக வள்ளல் ஆவான்.

பேகன் கொடையில் சிறந்தவன். தன்னிடம் வரும் புலவர்களுக்குப் பொருள்களை வாரி வாரி வழங்குவான். அவன் நாட்டில் எல்லா மக்களும் இன்புற்று வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் பேகன் மாலை நேரத்தில் மலைக் காட்சிகளை காண்பதற்காகப் புறப்பட்டான். கால் நடையாகவே மலைச் சரிவுகளில் நடந்து சென்ருன். அப்பொழுது கார் காலம். வானத்தில் மேகங்கள் நிறைந்து மழை இலேசாகப் பெய்து கொண்டு இருந்தது. குளிர் காற்றும் வீசியது. பேகன் ஒரு விலை உயர்ந்த போர்வையைப் போர்த்திக் கொண்டு சென்ருன்.

பேகன் வழியில் ஒரு மயிலைக் கண்டான். அது தன் அழகிய தோகையை விரித்துக்கொண்டு அழகாக நடனம் ஆடியது. மயில்கள் மேகத்தைக் கண்டால் மிகுந்த மகிழ்ச்சியடையும்; அப்பொழுது அவை தோகையை விரித்து ஆடி மகிழும்.

மயிலின் ஆட்டத்தைப் பேகன் கண்டான்; வாடைக் காற்றால் ஏற்படும் குளிரால்தான் இவ்விதம் அந்த மயில் நடுங்கி ஆடுகிறது. என்று எண்ணினான்; அதனால் மனத்துயர் அடைந்தான்; அந்த மயிலின் குளிரைப் போக்க வேண்டும் என்று கருதினான். உடனே தான் போர்த்தியிருந்த போர்வையைக் கையில் எடுத்தான்; அம்மயிலின் அருகில் மெதுவாகச் சென்று அப்போர்வையை அதன் மீது போர்த்தினான்.

பிறகு பேகன் மழையில் நனைந்து குளிரினால் நடுங்கிக் கொண்டே அரண்மனையை அடைந்தான். பேகனின் இளகிய மனதைப் பாருங்கள். நீங்களும் துன்பப்படுகிறவர்களைக் கண்டால் அவர்களிடம் இரக்கம் கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| சிற்றரசன் | பெருஞ்சிறப்பு | கொடை |
| வள்ளல் | வழங்கப்பட்டான் | வழங்குவான் |
| ஆவியர்குடி | பொதினிமலை | இன்புற்று |
| கால்நடை | காண்பதற்கு | காட்சி |
| மலைச்சரிவு | கார்காலம் | போர்வை |
| தோகை | நடனம் | வாடை |
| அரண்மனை | இரக்கம் | கருதினான் |

## பயிற்சி

### *1.* *வினுக்கள் :*

1. பேகன் எந்தக் குடியில் பிறந்தவன் ?
2. வள்ளல் என்று யாரைக் கூறுவார்கள் ?
3. பேகன் மலேச்சரிவில் என்ன கண்டான் ?
4. பேகன் மயிலேப் பார்த்து என்ன செய்தான்?

### *2.* *மொழிவளம் :*

1. கோடிட்ட இடங்களே நிரப்பு.

(1) பேகன் ——— வள்ளல்களில் ஒருவன்.

(2) பேகன் ——— என்ற பழங்குடியைச் சேர்ந்தவன்.


(3) பேகன் ——— காற்ருல் ஏற்படும் குளிரை உணர்ந்தான்.

(4) அம்மயிலின் அருகில் பேகன் சென்று தான் ——— அதன்மீது போர்த்தினன்.

2. தெரிந்துகொள் :

வடக்கிலிருந்து வீசுங்காற்று வாடைக் காற்று.
தெற்கிலிருந்து வீசுங்காற்று தென்றற் காற்று.
வாடைக்காற்று துன்பம்தரும்; தென்றற்காற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

---



# 5. கோழி

பெரும்பாலும் கிராமங்களில் அதிகமாகக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. பட்டணங்களிலும் சிலர் கோழிகளை வளர்க்கின்றார்கள். வீட்டுப் பறவைகளில் கோழி முக்கியமானது. சிறந்த உணவுப் பொருள்களில் கோழி முட்டையும் ஒன்றாகும். கோழி இறைச்சியையும் சிலர் உண்பார்கள்.

ஆண் கோழிக்குச் 'சேவல்' என்று பெயர். பெண்கோழிக்குப் 'பெட்டை' என்று பெயர். சேவற் கோழியின் தலையில் கொண்டை இருக்கும்.

அலகின் அடிப்பாகத்தை ஒட்டிச் சதைத் துண்டு ஒன்று தொங்கும். அதைத் தாடி என்று சொல்லுவார்கள். சேவற் கோழிக்கு நீண்ட பலவித வர்ணமுடைய இறகு உண்டு. சேவற் கோழி விடியற் காலையில் 'கொக்கரக்கோ' என்று கூவி மக்களை எழுப்பும். அதனால் அதனைக் குடியானவர்களின் கடிகாரம் என்பார்கள்.

பெட்டைக்கோழிக்குக் கொண்டைகிடையாது; தாடியும் இல்லை. வாலிறகு குட்டையாக இருக்கும். கோழிகளைப் பார்த்து இந்த வேறுபாட்டை நீங்கள் அறியலாம்.

பெட்டைக் கோழி ஒரு தடவையில் சுமார் பத்து முதல் இருபது முட்டைகள் வரை இடும். அந்த முட்டைகளைக் கோழி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளி வந்தவுடன் இரை தின்று தண்ணீர் குடிக்க ஆரம்பிக்கும். தன் குஞ்சுகளைக் கருடன், பருந்து முதலிய பறவைகள் தூக்கிக் கொண்டு போகாத படி கோழி பத்திரமாகப் பாதுகாக்கும். அந்தப் பறவைகள் ஆகாயத்தில் பறப்பதைப் பார்த்தால் கோழி ஒருவித சத்தம் கொடுக்கும். உடனே குஞ்சுகள் ஓடிவந்து கோழியின் இறக்கைக்குள் பதுங்கிக்கொள்ளும்.

கோழியின் உடல் பெரியது. அதன் இறகுகள் குட்டையானவை. ஆகையால், அதனல் அதிக உயரம் பறக்கமுடிவதில்லே. கோழி தன் கால்களால் நடந்து சென்று இரைதேடும். நடப்பதற்கு உதவியாகவே கால் விரல்கள் அதற்கு அமைந்துள்ளன. சேவற் கோழிகளுக்குப் பின்விரலுக்குமேல் ஒரு சிறு விரல் நீட்டிக்கொண்டிருக்கும். இதனல் இது தன் பகைவரைச் சண்டையிட்டுக் குத்திக் கிழிக்கும். கோழி குப்பை, கூளங்களேக் கிளறி அங்குள்ள புழு, பூச்சிகளேப் பிடித்துத் தின்னும். கோழிக்குத் தானியங்களேயும் குழைத்த தவிட்டையும் ஆகாரமாகப் போடுவார்கள். கோழி தன் உணவுகளுடன் சிறு சிறு கற்களேயும்கூட விழுங்கிவிடும்.

உணவுக்காகவும், வியாபாரத்திற்காகவும், மக்கள் கோழியை வளர்க்கிருர்கள். கோழி வளர்த்தல் வருவாய் தரும் தொழிலாக இப்பொழுது கருதப்படுகின்றது. சிலர் பொழுது போக்குக்காகவும் கோழியை வளர்க்கிருர்கள். அயல் நாட்டுக் கோழிகளில் லெக்கான், மைனர்கா எனப் பலவகை உண்டு. அவை அதிகமாக முட்டைகள் இடும். வெள்ளே ரகமான லெக்கான் கோழிகள் ஒரு வருடத்தில் சுமார் இருநூறு முட்டைகள்வரை இடுகின்றன. நாம் அயல் நாட்டுக் கோழிகளே வளர்ப்பது நல்லது.

| | | |
|---|---|---|
| பெரும்பாலும் | பட்டணங்கள் | கொண்டை |
| எழுப்பும் | வீட்டுப்பறவை | பலவித |
| பொரிக்கும் | பத்திரமாக | குழைத்த |
| சத்தம் | பாதுகாக்கும் | வருவாய் |

பயிற்சி


1. ***வினக்கள் :***
   1. பெட்டைக் கோழிக்கும், சேவலுக்கும் உள்ள வித்தியாசங்கள் யாவை ?
   2. கோழியால் நாம் அடையக்கூடிய நன்மை என்ன?
   3. கோழி முட்டையிலிருந்து குஞ்சுகள் எப்படி உண்டாகின்றன ?
   4. கோழி தன் குஞ்சுகளை எவ்வாறுபாதுகாக்கின்றது?

2. ***மொழிவளம் :***
   1. கோழி முட்டை இடும்.
   2. எங்கள் ஊரில் விநாயகர் கோவில் இருக்கிறது.
   3. பொன்னன் சென்னைக்குச் சென்முன்.

இந்த வாக்கியங்களில் பொன்னன் என்ற சொல் ஒரு மனிதன் பெயரைக் குறிக்கிறது. விநாயகர் என்ற சொல் ஒரு தெய்வத்தின் பெயரைக் குறிக்கிறது. கோழி என்பது ஒரு பறவையின் பெயரைக் குறிக்கிறது. சென்னை என்ற சொல் ஓர் இடத்தைக் குறிக்கிறது. இவை எல்லாம் பெயர்களைக் குறிப்பதனல் இவை ***பெயர்ச்சொல்*** எனப் படும். ஆகையால் ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிப்பது ***பெயர்ச்சொல்*** ஆகும்.

கீழே காணப்படும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களை எழுது:

1. கோழி குப்பை கூளங்களைக் கிளறும்.
2. கோழி புழு பூச்சிகளைத் தின்னும்.
3. முருகன் தஞ்சைக்குச் சென்முன்.
4. வள்ளி பாடம் படிக்கிருள்.



# 6. எல்லாரோடும் இணங்க முயலுதல்

நல்லூர் என்ற ஊரில் இனியான் என்ற வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் அடக்கமானவன். எவர் மனமும் புண்படும் படியாகப் பேசமாட்டான். உலகத்தில் எல்லா மக்களோடும் ஒத்து, அவர்கள் கருத்துப்படி வாழ வேண்டும் என்பதுதான் அவனுடைய எண்ண மாகும். ஆகையால், அவன் யார் எதைக் கூறினலும் அதன்படி நடந்து அவர்களே மகிழ்விக்க முயற்சி செய்வான்.

இனியானிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அதை அவன் விற்றுவிடக் கருதினன்.

அதற்காக அவன் தன் மகனுடன் அக்கழுதையை அயலூரில் உள்ள சந்தைக்கு ஓட்டிக்கொண்டு சென்றான்.

வழியில் அவனுடைய நண்பன் ஒருவன் அவனைக் கண்டான். நண்பன் இனியானைப் பார்த்து, "என்ன இனியா! கழுதை ஒன்றை வீணாக ஓட்டிக்கொண்டு நீங்கள் இருவரும் ஏன் இப்படி வெயிலில் நடந்து வரவேண்டும்? உங்களிலே யாராவது ஒருவர் இக்கழுதை மேல் ஏறிச் செல்லலாமே" என்று கூறி நகைத்தான்.

அதைக் கேட்ட இனியான், "அதுவும் சரிதான்" என்று கருதித் தன் மகனைக் கழுதையின் முதுகில் ஏற்றிக்கொண்டு வழி நடந்தான்.

சிறிது தூரம் சென்றனர். இடையிலே வழிப்போக்கர் சிலர் அவர்களைக் கண்டனர். அவர்கள் மகனைப் பார்த்து, "அடா, பாவி! பெற்ற தகப்பன் வெயிலில் தள்ளாடிக்கொண்டு நடந்து வருகிறான்; நீ கழுதைச் சவாரி செய்கிறாயே? இது தகுமா" என்று கேட்டனர்.

இதைக் கேட்ட இனியான், சிறுவனைக் கீழே இறக்கி விட்டுத் தான் கழுதைமேல் ஏறிக் கொண்டு சென்றான். வழியிலே வேறு சிலர் இவர்களைச் சந்தித்து இனியானைப் பார்த்து, "ஐயோ! நீ பிள்ளையைப் பெற்றவன் தானா?

இளஞ் சிறுவன் வெயிலில் வாட நீ கழுதை மேல் ஏறிச் செல்வது தகுமா ?" என்று ஏசினார்கள்.

இனியான் என்ன செய்வதென்று அறியாமல் தயங்கினான். பிறகு சிறுவனையும் கழுதை மேல் ஏற்றிக் கொண்டு, அதனை ஓட்டிச் சென்றான். சிறிது தூரம் சென்றார்கள். அப்போது சிலர் அவர்களைப் பார்த்து, "அட பாவிகளே! கழுதை யின் முதுகு ஒடிந்து விடும்போல் இருக்கிறதே! உங்கள் மனதில் இரக்கம் என்பதே இல்லையா"? என்று கேட்டார்கள்.

பின்னர் அவர்களில் ஒருவன், இனியானைப் பார்த்து, "நீங்கள் இரண்டு பேர்கள் இருக் கிறீர்கள்; கழுதையோ ஒன்று; உங்கள் இருவரைக் இக் கழுதை சுமப்பதை விட, நீங்கள் இக் கழுதையைத் தூக்கிக்கொண்டு செல்வது நல்லது" என்றான். இனியானும் அவன் கூறியதை ஒத்துக் கொண்டான்.

பிறகு இனியான் அக் கழுதையின் நான்கு கால்களையும் ஒரு கயிற்றால் கட்டினான்; இடையில் ஒரு மூங்கிலை நுழைத்தான். அம்மூங்கிலை ஒருபுறம் சிறுவனும், மறுபுறம் தானுமாகப் பற்றிக்கொண்டு கழுதையைத் தூக்கிக்கொண்டு சென்றார்கள்.

வழியிலே ஓர் ஆழமான ஆற்றின் பாலத்தின் மேல் ஒருபுறமாக ஒதுங்கிச் சென்று கொண் டிருந்தார்கள்.

அந்தப் பாலத்தின் மேல் போய்க்கொண் டிருந்தவர்கள் இவர்களைக் கண்டு கைகொட்டி நகைத்தார்கள். அந்த ஆரவாரத்தைக் கேட்ட கழுதை மிரண்டு கால்களை உதைத்துக்கொண்டது. அதனுல் கயிறு அறுந்து அக்கழுதை ஆற்றில் விழுந்து இறந்தது.

பாவம், இனியான் வருத்தத்துடன் வீடு திரும்பினுன். ஒருவன் எல்லோரையும் மகிழ்ச்சிப் படுத்த முடியாது. தனக்கு எது நல்லது என்று ஆராய்ந்து முடிவு செய்கின்ருனே அதன்படி நடப்பதுதான் நல்லது ஆகும்.

| | | |
|---|---|---|
| வேளாளன் | ஒத்து | சந்தை |
| அடக்கம் | எண்ணம் | நண்பன் |
| புண்படும்படி | வயதான | வீணுக |
| நகைத்தான் | தள்ளாடி | தகுமா |
| சந்தித்து | ஏசினுர்கள் | தயங்கினுன் |
| இரக்கம் | ஒத்துக்கொண்டான் | நுழைத்தான் |
| ஒதுங்கி | ஒருபுறமாக | கைகொட்டி |
| ஆரவாரம் | ஆராய்ந்து | முடிவு |

### பயிற்சி

***1. வினுக்கள் :***

1. இனியான் எப்படிப்பட்டவன் ?
2. இனியான் எதற்காக அயலூர் சென்ருன் ?
3. இனியானைக் கண்ட நண்பன் என்ன கூறினுன்?
4. மகனைப் பார்த்த வழிப்போக்கர் என்ன கூறினர் ?
5. இருவரும் கழுதைமேல் ஏறி வருவதைக் கண்டவர்கள் என்ன கூறினுர்கள் ?
6. கழுதை ஏன் இறந்தது ?
7. இந்தக் கதையால் நீ அறிவது என்ன ?


# 7 தொழிலாளிகள்

நாம் இவ்வுலகில் வாழ்கின்ருேம். நமக்கு வேண்டிய உதவிகளேச் செய்து வாழ்பவர் தொழிலாளிகள். ஒரு ஊர் என்ருல் அங்கே பல தொழிலாளிகள் வாழ்வார்கள். அவர்கள் உதவியால் தான் நாம் நல்வாழ்க்கை வாழ முடிகிறது.

மக்கள் வசிப்பதற்கு வீடு அவசியம். வீடுகளேக் கட்டுபவர்கள் கொத்துவேலே செய்பவர். இவர்களேக் கொத்தனுர் என்பார்கள். மண்ணிஞலும், செங்கற்களாலும் இவர்கள் சுவர் எழுப்புவர். கூரை வீடுகள் முதல், பெரிய மாளிகைகள் வரையில் இவர்கள் கட்டுகிருர்கள்.



வீட்டிற்கு சன்னல், கதவு, நிலே, தூண், பெட்டி, மேசை, நாற்காலி இவைகள் வேண்டும் அல்லவா? இந்த மரவேலேகளே, மரவேலே செய்பவர் செய்கின்றனர். அவர்கள் தச்சர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.



உணவு சமைப்பதற்குப் பாண்டங்கள் வேண்டும். ஏழைகள் மண் பாண்டங்களில் சமைப்பர். மண்பாண்டங்களைச் செய்பவர் மண் பாண்டம் செய்வோர் அல்லது குயவர் எனப்படுவார். மண்ணை நேர்த்தியாகப் பிசைந்து சக்கரத்தில் இட்டுச் சட்டி, பானை, குடம் முதலிய பாண்டங்கள் செய்வார்கள்.




செல்வம் உடையவர்கள் உலோகப் பாத்திரங்களைப் பயன் படுத்துவார்கள். உலோகப் பாத்திரங்களைச் செய்பவர் கன்னார். பித்தளை, செம்பு, வெண்கலம், ஈயம் முதலிய உலோகங்களைக் கொண்டு அவர்கள் பாத்திரங்கள் செய்கிறார்கள்.

இரும்புக் கருவிகளைச் செய்து கொடுக்கும் தொழிலாளர்கள் கருமார் எனப்படுவார்கள். இரும்பை உலையிலிட்டுக் காய்ச்சி அவர்கள் பல கருவிகளைச் செய்கின்றனர்.

பாய் நெய்வோரும் உண்டு. கோரைப் புல்லைக் கொண்டு அவர்கள் நேர்த்தியான பாய்களை நெய்கிறார்கள். தாழை, ஈந்து, பனை இவைகளின் ஓலைகளினாலும் சிலர் பாய்கள் நெய்கின்றனர்.

சிலர் தென்னை ஓலைகளைக் கொண்டு கீற்று முடைகிறார்கள். கீற்றுகள் கூரை வேய்வதற்கு உதவுகின்றன.

மக்கள் அனைவருக்கும் உடை அவசியம். ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்.



பஞ்சில் இருந்து நூல் நூற்கிறார்கள். நூற்ற நூலைக்கொண்டு ஆடைகளை நெய்கிறார்கள். ஆடை நெய்பவர் சேணியர் எனப்படுவர்.

உணவு இல்லாவிட்டால் எல்லோரும் பசியால் வாடுவார்கள்; உயிர் வாழவும் முடியாது. உணவுக்கு வேண்டிய தானியங்களை உண்டாக்குபவர் உழவர்கள்.

உணவு மட்டும் இருந்தாலும் போதாது. பிற பொருள்களும் வாழ்க்கைக்கு வேண்டும்.



பிற தொழிலாளிகளும் நமக்குத் தேவை. ஆகையால் நாம் உழவையும், தொழிலையும் போற்றி வளர்த்தல் வேண்டும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.

| | | |
|---|---|---|
| உதவி | பாண்டங்கள் | நேர்த்தியான |
| பித்தளை | எழுப்புவர் | வேய்வதற்கு |
| தொழிலாளி | உலோகம் | வெண்கலம் |
| வாழ்க்கை | வந்தனை | போற்றி |

## பயிற்சி

**1. வினுக்கள்:**

1. சில தொழிலாளிகளின் பெயர்களைக் கூறு.
2. மரவேலை செய்பவர் நமக்கு என்ன உதவி செய்கின்ருர்கள் ?
3. உழவர்கள் என்ன உதவி செய்கிருர்கள் ?
4. நாம் ஏன் தொழிலைப் போற்றவேண்டும் ?

**2 மொழி வளம் :**

தெரிந்துகொள் :

| | |
|---|---|
| சலவைத்தொழில் செய்பவர் | வண்ணுர் |
| பாத்திரங்கள் செய்பவர் | கன்ஞர் |
| மண்பாண்டங்கள் செய்பவர் | குயவர் |
| மரவேலை செய்பவர் | தச்சர் |
| உழவுத் தொழில் செய்பவர் | உழவர் |
| இரும்பு வேலை செய்பவர் | கருமார் |

# 8. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் !
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் !
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ ?

2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது !
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ?

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள் ?
குயவர் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திடவேண்டும் என்றும் ?

4. கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி !

5. வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணிற் சிறப்பது கைத்தொழிலால் !

—நாமக்கல் கவிஞர்



# 9. பொன் வாத்து

[மௌனப்படிப்பு]

[இப்பாடத்தை மனதிற்குள் படி. பின்னர் புத்தகத்தை மூடிவை. கீழே உள்ள வினுக்களுக்கு விடை அளி.]

சேற்றூர் என்ற ஊரில் சொக்கன் என்ற ஏழைக் குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு பேராசைக்காரன். பெரிய செல்வந்தனுக ஆகிவிட வேண்டும் என்பது அவனது ஆசை.

அவன் அருமையான வாத்து ஒன்றை வளர்த்து வந்தான். அந்த வாத்து தினந்

தோறும் ஒரு பொன் முட்டையிடும். அதனுல் அந்த வாத்தைப் பொன் வாத்து என்று மக்கள் கூறி வந்தார்கள். சொக்கன் அந்த முட்டையை நல்ல விலேக்கு விற்று மிகுந்த பொருளேப் பெற்று வந்தான். நாளடைவில் அவன் ஒரு பெரிய செல்வந்தன் ஆனுன்.

ஒரு நாள் அந்தப் பேராசைக்காரனுன சொக்கன் தன் வீட்டின் வாயிலில் உட்கார்ந்து கொண்டு தனக்குள் பின் வருமாறு எண்ணத் தொடங்கினுன். "என் வாத்து ஒரு பொன் வாத்து. அதன் வயிற்றில் நிறையப் பொன் இருக்கிறது. அதனுல் தான் அது தினந்தோறும் எனக்கு ஒரு முட்டை தருகிறது. இப்படி, இது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முட்டையாகக் கொடுக்குமானுல் நான் என்றைக்குப் பணக்காரன் ஆவது? ஆகையால் இன்றைக்கே இதன் வயிற்றைக் கிழித்து எல்லா முட்டைகளேயும் எடுத்துக் கொள்வேன். ஆ! ஒரே நாளில் நான் எவ்வளவு பெரிய பணக்காரன் ஆவேன் தெரியுமா?"

இவ்வாறு அவன் நினேத்தான். அதனுல் அவன் உடனே தன் பொன் வாத்தைப் பிடித்துக் கொண்டு வந்தான். ஒரு கூர்மையான கத்தியால் அதன் வயிற்றைக் கிழித்தான். ஆனுல், அவன் கண்டது என்ன? அன்றைக்கு இட வேண்டிய

ஒரே ஒரு முட்டை தான் அதன் வயிற்றில் இருந்தது.


பாவம்! வாத்து இறந்து விட்டது. சொக்கன் அன்று முதல் பொன் முட்டைகள் பெற முடிய வில்லை. அதனால் சொக்கன் வரவரப் பொருள் குறைந்து மீண்டும் ஏழையானான்.

## பயிற்சி

1. **வினாக்கள் :**

1. சொக்கன் எப்படிப்பட்டவன் ?
2. அவன் எவ்வாறு பெரிய செல்வந்தன் ஆனான் ?
3. சொக்கன் ஒரு நாள் நினைத்தது என்ன ?
4. இப்பாடத்தின் கருத்து என்ன ?
5. இப்பாடத்திற்கு வேறு ஒரு தலைப்பு கொடு.
6. இக்கதையை உன் தம்பிக்குக் கூறு.

——




# 10. எறும்பு

எறும்புகளைப் பார்க்காதவர்கள் உங்களில் எவரும் இல்லை. எல்லோரும் பார்த்திருப்பீர்கள். எங்கேயாவது இனிப்புப் பொருள்கள் இருந்தால் அங்கெல்லாம் எறும்புகள் வந்து கூடிவிடும். எறும்புகள் சிறிய உயிர்ப்பொருளாக இருந்தாலும் அவை மிகவும் சுறுசுறுப்புள்ளவை. அது கூட்டங் கூட்டமாக வசிக்கும். சாரை சாரையாக ஊர்ந்து செல்லும்.

எறும்புகளில் சிற்றெறும்பு, கட்டெறும்பு, பிள்ளையார் எறும்பு எனப் பலவகை உண்டு. பிள்ளையார் எறும்பு கடிக்காது. மற்றைய எறும்புகள் கடிக்கும். கடித்தால் அவ்விடத்தில்

கடுக்கும். முசுடு என்பது ஒருவகைச் செந்நிற எறும்பு. முசுடுகள் மரங்களின் இலைகளில் கூடு கட்டி வசிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். முசுடு முட்டைகள் மருந்துக்கு உதவும்.

முசுட்டைத் தவிர மற்றைய எறும்புகள் தரையில் வசிக்கும். எறும்புப் புற்றுகள் பூமிக் கடியில் வெகு ஆழமாகப் பரவியிருக்கும். இந்தப் புற்றுக்களைச்சில எறும்புகள் காவல் காக்கும். அவை காவற்கார எறும்புகள் எனப்படும். புற்றின் அடியில் பெரிய எறும்பு ஒன்று வாழும். அது இராணி எறும்பு எனப்படும். இராணி எறும்புக்குப் பளபளப்பான இறக்கைகள் உண்டு. இந்த இராணி எறும்பு அடிக்கடி நூற்றுக் கணக்கில் முட்டையிடும். முட்டைகளிலிருந்து சில நாட் களில் புழுக்கள் வெளிவரும். புழுக்கள் ஒரு சில நாட்களில் எறும்புகளாக மாறும். உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டுவந்து புற்றில் சேர்ப்பவை வேலைக்கார எறும்புகள் எனப்படும். இராணி எறும்புக்குத் துணையாக சில ஆண் எறும்புகளும் கூட்டில் இருக்கும்.

எறும்புகள் தங்களுக்கு வேண்டிய உணவு களைக் கோடைக் காலத்திலேயே சேர்த்து வைத்துக்கொள்ளுகின்றன. சில வேளைகளில் எறும்புகள் தங்கள் முட்டைகளையும் உணவுப்

பொருள்களையும் தூக்கிக்கொண்டு வரிசையாகச் செல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். ஏன் அவ்வாறு செல்லுகின்றன தெரியுமா? பள்ளத் தாக்குகளில் வாழும் எறும்புகள் மழையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள மேட்டு நிலத்தை நோக்கி அவ்வாறு செல்கின்றன. ஆதலால் எறும்புகளை அறிவுள்ள பிராணி என்று சொல்லலாம் அல்லவா?

எறும்பின் உடலானது தலை, மார்பு, வயிறு என்ற மூன்று பாகங்களால் ஆனது. முன்புறம் இருக்கும் தலையில் இரண்டு உரோமக்கொம்புகள் நீட்டிக்கொண்டிருக்கும். இவற்றுக்குத் தொடுவி எனப்பெயர். இந்தத் தொடுவி என்ற உறுப்புக் களே எறும்புக்கு உணர்ச்சிக் கருவியாக பயன் படுகின்றன. எறும்புக்குக் கண்கள் இல்லை. இது உங்களுக்கு விந்தையாகத்தானே இருக்கிறது? எறும்புக்கு ஆறு கால்கள் உண்டு.

எறும்புகளைப் போலச் சுறுசுறுப்புடனும் ஒற்றுமையுடனும், முன்னறிவுடனும் இருக்க நாம் பழகவேண்டும்.

| | | |
|---|---|---|
| உயிர்ப்பொருள் | பிள்ளையார் | முன்னறிவு |
| முசுடு | புற்று | கடுக்கும் |
| பள்ளத்தாக்கு | புழு | இராணி |
| தொடுவி | உணர்ச்சி | உரோமம் |
| விந்தை | சுறு சுறுப்பு | கருவி |

### பயிற்சி

**1. வினாக்கள் :**

1. எறும்பின் பலவகைகளைக் கூறு.

2. புற்றில் இருக்கும் எறும்புகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? ஒவ்வொன்றின் முக்கிய வேலைகளைக் கூறுக.

3. ஏன் எறும்புகளை அறிவுள்ள உயிர்கள் என்று கூறலாம்?

4. எறும்பின்உடல்எத்தனைப் பாகங்களால்ஆகியது?

**2. மொழிவளம் :**

(1)

| | |
|---|---|
| எறும்பு | — எறும்புகள் |
| மரம் | — மரங்கள் |
| புழு | — புழுக்கள் |
| முட்டை | — முட்டைகள் |

இவற்றைக் கவனியுங்கள். எறும்பு, மரம், புழு, முட்டை என்பன ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் ஆகும். எறும்புகள், மரங்கள், புழுக்கள், முட்டைகள் என்பன பல பெயர்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் ஆகும்.

இவ்வாறு ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்கள் ஒருமைப் பெயர்கள் எனச் சொல்லப்படும். பலவற்றைக் குறிக்கும் பெயர்கள் பன்மைப் பெயர்கள் என்று சொல்லப் படும்.

(2) கீழே காட்டப்பட்டிருக்கும் பெயர்ச் சொற்களை ஒருமை, பன்மை என்று பிரித்துக் காட்டு.

கொம்புகள், கண், தலை, இலைகள், இறக்கைகள், நிலம்.

# 11. தூய்புரவு

[உரையாடல்]

**கண்ணன் :** முருகா, நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடந்தான் இல்லையே! என் வீட்டிற்கு வருகிறாயா? நாம் இருவரும் சேர்ந்து விடுமுறை நாளை வேடிக்கையாகக் கழிப்போம்.

**முருகன் :** பள்ளிக்கூடம் இல்லாவிட்டால் என்ன? வீட்டில் வேலைகள் இல்லையா? ஆகையால் நான் நாளைக்கு உன் விருப்பப்படி வர முடியாமைக்கு வருந்துகிறேன்.

**கண்ணன் :** வீட்டில் உனக்கென்ன வேலை. உன் தாயார்தான் எல்லா வேலைகளையும் பார்த்துக் கொள்ளுவாரே?

**முருகன் :** நன்றாகச் சொன்னாய். நாம் வீட்டு வேலைகளில் தாயாருக்கு உதவி செய்ய வேண்டாமா?

**கண்ணன் :** நீ வீட்டில் என்ன வேலைதான் செய்கிறாய்?

**முருகன் :** வீட்டைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் சொன்னர் அல்லவா? அதன்படி நான் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒரு நீண்ட துடைப்பத்தால் கூரைகளிலும், சுவர்களிலும் உள்ள தூசுகளையும் ஒட்டடைகளையும் துடைத்துக் கீழே தள்ளுவேன். கண்ணாடி, மேசை, நாற்காலி முதலியவற்றையும் துடைப்பேன்.



என் தங்கை, வீடு முழுவதும் பெருக்கிக் குப்பைகளை ஒதுக்குவாள். அக்குப்பைகளைக் குப்பைக் குழியில் கொண்டுபோய்க்கொட்டுவோம். பிறகு என் தாயார் கிணற்றில் நீர் இறைத்துத் தருவார்கள். நாங்கள் இருவரும் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்வோம்.



**கண்ணன் :** நல்ல காரியம் செய்கின்றீர்கள்! பிறகு?

**முருகன் :** நாங்கள் எங்கள் உடைகளுக்குச் சோப்புப் போட்டுத் துவைத்துச் சலவை செய்வோம்.

**கண்ணன் :** உங்கள் உடைகளை நீங்களே துவைத்துக் கொள்வதா?

**முருகன் :** ஏன்? இதில் என்ன தவறு?

**கண்ணன் :** தவறு என்று நான் சொல்ல வில்லை. உடைகளைச் சலவைக்குப் போட்டால் சுத்தமாகத் திரும்பி வருமே என்றுதான் சொன்னேன். காலமும் வீணாகாது அல்லவா?

**முருகன் :** நான் ஒன்றும் அப்படி நினைக்க வில்லை. நாம் படிப்பது போக எவ்வளவோ நேரம் எஞ்சி இருக்கிறது. அதை வீணாக்காமல் நம் வீட்டு வேலைகளைச் செய்வதில் குறைவு என்ன? நம் உடைகளை நாமே சுத்தம் செய்து கொள்வது நல்லது தானே. மேலும், சலவைக்குப் போட்டால் உடைகள் திரும்பி வர இரண்டு வாரமாவது ஆகும். அதிக உடுப்புகள் வைத்திருப்பவர்கள் தான் அடிக்கடி சலவைக்குப் போடமுடியும்.



**கண்ணன் :** பிறகு என்ன செய்வீர்கள்?

**முருகன் :** நானும் என் தங்கையும் பிறகு நன்ருக அழுக்குத் தேய்த்துக் குளிப்போம்.

குளித்த பின் உலர்ந்த துணியினுல் உடம்பைத் துடைத்துக் கொண்டு சுத்தமான ஆடைகளை உடுத்துவோம். எங்கள் தாயார் அளிக்கும் காலை உணவை உண்டு மகிழ்வோம்.

**கண்ணன்:** நமக்கு வேண்டிய வேலைகளை நாமே செய்து கொள்வது நல்லது தானே ?

**முருகன்:** ஆம். இதில் இரண்டு வித நன்மைகள் இருக்கின்றன. நமது வீடும், சுற்றுப் புறமும் துப்புரவாகின்றன. நாமும் நோயினுல் துன்பப் படாமல் இருக்க முடியும். மேலும் வேலைகள் செய்வதால் உடல் உறுப்புக்கள் எல்லாம் வலிமையைப் பெறும்.

**கண்ணன்:** நண்பா, நானும் இனி என் வீட்டு வேலைகளை முடிந்த வரையில் செய் கின்றேன். சென்று வருகிறேன். வணக்கம்.

**முருகன்:** சென்றுவா. வணக்கம்.

| | | |
|---|---|---|
| விடுமுறை | வேடிக்கை | துப்புரவு |
| துடைப்பம் | ஒட்டடை | காரியம் |
| சலவை | வீணுகாது | இறைத்து |

பயிற்சி

***1. வினுக்கள்:***

1. வீட்டைத் துப்புரவாக வைக்க என்ன செய்ய வேண்டும் ?

2. நாம் நம் உடைகளைத் துவைத்துக் கொள்வதால் என்ன நன்மை உண்டாகிறது ?

3. நமது வேலைகளை நாமே செய்வதால் ஏற்படும் பலன் என்ன ?

## 2. *மொழிவளம்:*

1. தெரிந்துகொள் : அப்பா, அண்ணன், தம்பி, கண்ணன் இப் பெயர்ச் சொற்கள் ஆண்களைக் குறிக்கின்றன. அம்மா, அக்காள், தங்கை, வள்ளி—இப் பெயர்ச் சொற்கள் பெண்களைக் குறிக்கின்றன. ஆகையால் பெயர்ச் சொற்களில் ஆண்களைக் குறிக்கும் பெயர்கள், பெண்களைக் குறிக்கும் பெயர்கள் என வேறுபாடு உண்டு.

ஆணினைக் குறிப்பது ஆண்பால்; பெண்ணினைக் குறிப்பது பெண்பால்.

2. பாகுபாடு செய்க : இராமன், கமலம், தந்தை, தாயார், சிறுமி, வேலன், சிறுவன், மகள், மாமன், மகன்—இவற்றை ஆண், பெண் என்று பிரித்து எழுது.



## 12. வீரர் சிதம்பரனர்

தமிழ் நாட்டின் தென்கோடியில் திருநெல்வேலி மாவட்டம் இருக்கிறது. ஒட்டப்பிடாரம் என்பது அம் மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். அந்த ஊரில் 1872-ஆம் ஆண்டு பிறந்தவர் வீரர் சிதம்பரனர். இவர் தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்குக் கப்பல் ஓட்டியதால் இவரைக் கப்பல் ஓட்டிய தமிழர் என்பார்கள்.

சிதம்பரனர் இளமையில் ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். பிறகு அவர் தூத்துக்குடியில் வக்கீல் தொழில்

நடத்தி வந்தார். சிதம்பரனார் நல்லொழுக்கத்தில் தலைசிறந்தவர். பொருள்மேல் அவருக்கு ஆசை இல்லை. அதனால் அவர் தம்மிடம் வரும் பொய் வழக்குகளை ஏற்று நடத்தமாட்டார். உண்மையான வழக்குகளைத்தான் ஏற்று நடத்துவார். அவர் ஏழைகளிடம் இரக்கம் கொண்டவர். ஆகையால் ஏழை மக்கள் சிதம்பரனாரைப்போற்றிப் புகழ்ந்தார்கள்.

சில ஆண்டுகளுக்குமுன் வரையில் ஆங்கிலேயர் நம்நாட்டை ஆண்டுவந்தனர். நாம் அவர்களுக்கு அடங்கி வாழ்ந்து வந்தோம். நம்மை அவர்கள் அடிமைகளாகவே கருதி இழிவுபடுத்தி வந்தார்கள். நமக்குப் பேசுவதற்கும் சுதந்திரம் இல்லை. நாம் பழங்காலத்தில் நடத்திவந்த தொழில்களும் வியாபாரமும் சீரழிந்து போயின. நாடும் வறுமைநிலை அடைந்தது.

"நம் நாடு மீண்டும் செழிப்படைய வேண்டுமானால், நாம் முழுச் சுதந்திரமும் பெறவேண்டும். ஆங்கிலேயர் நம் நாட்டை ஆளுவதை விட்டு, அவர்கள் தம் நாட்டுக்குச் செல்ல வேண்டும்" என்று நம் நாட்டுத் தலைவர்கள் கருதினார்கள். அதற்காக அவர்கள் ஒரு கட்சியாகச் சேர்ந்து ஊர்கள்தோறும் சென்று மக்களுக்குச் சுதந்திர

உணர்ச்சியை ஊட்டி வந்தார்கள். நாட்டிலே கிளர்ச்சியும் எழுந்தது.

சிதம்பரனரும் இக்கிளர்ச்சியில் ஈடுபட்டார். ஆங்கிலேயரை விரட்ட வேண்டுமானல் அவர்கள் நம் நாட்டில் செய்து வரும் கப்பல் வியாபாரத்தை நாம் கைப்பற்ற வேண்டும் என்று சிதம்பரனர் கருதினர்.

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் வெள்ளைக் காரர்கள் கப்பல் மூலம் வியாபாரம் நடத்தி வந்தனர். அதற்குப் போட்டியாகச் சிதம்பரனர் நம் நாட்டுக்குச் சொந்தமான கப்பல் விட முயற்சி செய்தார். பல இடங்களுக்கும் சென்றார். தமது எண்ணத்தை வெளியிட்டார்; பெரும் பொருள் திரட்டினர்.

சிதம்பரனரின் முயற்சியினல் நம் நாட்டுக்குச் சொந்தமாகக் கப்பல்கள் வாங்கப்பட்டன. அந்தக் கப்பல்கள் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் சரக்குகளை ஏற்றிச் சென்று வியாபாரம் செய்தன. சிதம்பரனரின் பேச்சு வன்மையால் இந்தியர் வியாபாரம் ஓங்கியது. வெள்ளைக்காரர் வியாபாரம் குறையத் தொடங்கிற்று. இதனல் வெள்ளைக்காரர் சிதம்பரனர் மீது சீற்றம் கொண்டனர். வெள்ளை அரசாங்கம் சிதம்பரனர் மீது குற்றஞ்சாட்டி அவரைச் சிறையில் தள்ளியது.

சிதம்பரனுர் கொலைக் குற்றவாளி போலச் சிறையில் செக்கிழுத்தார்; கல்லுடைத்தார்; கேழ்வரகுக் களியை உணவாகக் கொண்டார். அவர் சிறையில் பட்ட துன்பத்திற்கு அளவில்லை என்ருலும் அவர் மனம் தளரவில்லை. 1912-ஆம் ஆண்டு அவர் விடுதலை அடைந்தார்.

விடுதலை பெற்ற வீரர் சிதம்பரனுர் பிறகு தூத்துக்குடி வந்தார். அவர் வக்கீல் வேலை பார்க்கக்கூடாது என்று அரசாங்கத்தார் தடை விதித்தார்கள். அதனுல் அவர் வறுமையால் வாட்டம் அடைந்தார். இறுதியில் அவர் உடல் நலம் குறைந்தது. 1936-ஆம் ஆண்டு அவர் காலமானுர்.

வீரர் சிதம்பரனுர் சிறந்த நாட்டுப்பற்று உடையவர்; அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்; துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் அவர் எடுத்த காரியத்தை முடித்தே தீருவார். அவரைப் போன்ற பெரியவர்களால்தான் நாம் இன்று சுதந்திரம் பெற்று அனுபவிக்கின்ருேம்.

| | | |
|---|---|---|
| கோடி | நல்லொழுக்கம் | செழிப்பு |
| மாவட்டம் | பொய்வழக்கு | வெளியேற |
| இழிவு | சீரழிந்து | உணர்ச்சி |
| விரட்ட | கைப்பற்ற | கிளர்ச்சி |
| நடத்தி | வெளியிட்டார் | போட்டி |
| வன்மை | வாட்டம் | சீற்றம் |

## பயிற்சி

### *1. வினுக்கள் :*

1. வீரர் சிதம்பரனுரின் குணங்களைக் கூறு.

2. சிதம்பரம் பிள்ளை கப்பல் வாங்க ஏன் கருதினுர் ?

3. சிதம்பரனுரை அரசாங்கத்தார் ஏன் சிறையில் அடைத்தனர்?

4. சிதம்பரனுர் சிறையில் அடைந்த துன்பங்களை எழுது.

5. சிதம்பரனுரை மக்கள் எவ்வாறு போற்றுகிருர்கள்?


### *2. மொழிவளம் :*

*வேலன் விளையாடினுன்*
*வேலன் விளையாடுகிருன்*
*வேலன் விளையாடுவான்*

இந்த வாக்கியங்களில் விளையாடினுன், விளையாடுகிருன், விளையாடுவான் என்பன வினைச் சொற்கள் அல்லவா? கவனித்துப் பாருங்கள். ***விளையாடினுன்*** என்பதில் தொழில் முன்னமேயே நடந்து விட்டது என்று அறிகிறேம்; இது ***இறந்தகாலம்.*** ***விளையாடுகிருன்*** என்பதில் தொழில் நடந்துகொண்டிருக்கிறது என்று அறிகிறேம்; இது ***நிகழ் காலம்.*** ***விளையாடுவான்*** என்பதில் தொழில் இனிமேல்தான் நடக்கும் என்று அறிகிறேம்; இது ***எதிர் காலம்.*** இவ்வாறு வினைச் சொற்களில் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்று மூன்று காலங்களையும் அறிகின்றேம்.

# 13. ஒற்றுமை வேண்டும்

[படம் பார்த்துப் படித்தல்]



எதிர்ப் பக்கத்தில் விளக்கப்பட்டிருக்கும் கதையைப் பத்து வாக்கியங்களில் எழுது. பின்வரும் வினுக்களுக்கு விடை எழுது.

## *1. வினுக்கள் :*

1. முதல் படத்தில் என்ன காண்கின்ருய் ?
2. இரண்டாவது படத்தில் சிங்கம் ஏன் ஓடுகிறது ? இதனுல் நீ என்ன அறிகிருய் ?
3. மூன்ருவது படத்திஞல் நீ அறிவது என்ன ?
4. நான்காவது படத்தில் நரி என்ன செய்கிறது ? யோசித்துச் சொல்.
5. ஐந்தாவது படத்தில் என்ன காண்கிருய் ? எருதுகள் ஏன் தனித்தனியாக மேய்கின்றன ?
6. ஆருவது படத்தில் என்ன பார்க்கிருய் ?
7. இந்தப் பாடத்திஞல் நீ அறிவது என்ன ?
8. இந்தக் கதையை உன் நண்பனுக்கு கூறு.

## *2. மொழிவளம்:*

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களே அமைத்து எழுது.

(1) சிங்கம் ஒரு ———— விலங்கு.

[காட்டு, வீட்டு]

(2) சிங்கத்திற்குக் கூர்மையான ——— உண்டு.
[கொம்புகள், நகங்கள்]

(3) சிங்கம் ——— அரசன்.
[விலங்குகளின், மக்களின்]

(4) எருதுகள் ——— இறந்தன.

[ஒற்றுமையாக இருந்ததால், ஒற்றுமைஇன்மையால்]

2. பின்வரும் வினைச் சொற்களின் வேறு காலங்களை எழுது:

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| படித்தான் | ——— | ——— |
| ஆடினேன் | ——— | ——— |
| ——— | எழுதுகிறுன் | ——— |
| ——— | பாடுகிறுன் | ——— |
| ——— | ——— | அடிப்பேன் |
| ——— | ——— | வாழ்வான் |

# 14. கூண்டுக் கிளி

சிறுவன்

பாலைக் கொண்டு தருகின்றேன்,
பழமும் தின்னத் தருகின்றேன்;
சோலைக் கோடிப் போகவழி
சுற்றிப் பார்ப்ப தேன்கிளியே ?
காட்டி லென்றும் இரைதேடிக்
களைத்தி டாயோ ? உனக்கிந்தக்
கூட்டில் வாழும் வாழ்வினிலே
குறைகளேதும் உண்டோ சொல் ?

கிளி


சிறையில் வாழும் வாழ்வுக்குச்
சிறகும் படைத்து விடுவானோ ?
இறைவன் அறியாப் பாலகனே ?
எண்ணி வினைகள் செய்யானோ ?
பாலும் எனக்குத் தேவையில்லை,
பழமும் எனக்குத் தேவையில்லை;
சோலை எங்கும் கூவிநிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா !

— கவிமணி

# 15. பனிநில மக்கள்

நம் நாட்டிற்கு வடக்கே, பூமியின் வட கோடியில் லாப்லாந்து என்ற ஒரு பரந்த மாநிலப் பகுதி இருக்கிறது. அப்பகுதி ஒரு உறை பனிக் காடு. வருடத்தில் பல மாதங்கள் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். ஆகையால் அந் நிலப் பகுதியைப் பனிநிலம் என்று அழைப்பார்கள்.


லாப்லாந்தில் குளிர் அதிகம். ஆதலால் அங்கு மரம், செடி, கொடிகள் வளருவது இல்லை.




கோடைக் காலத்தில் பனி சற்று உருகும். அக் காலத்தில் பாசி போன்ற சில சிறு செடிகள் அங்கும் இங்கும் தோன்றும். இங்கு ரெயிண்டீர் என்ற ஒரு வகைக் கலைமான்கள் வாழ்கின்றன. இம் மான்கள் லாப்லாந்து மக்களுக்குப் பல வகைகளிலும் பயன்படுகின்றன. அம் மக்கள் இவற்

றின் பாலை அருந்துகின்றார்கள்; இறைச்சியையும் உண்கின்றார்கள். இவற்றின் நரம்புகள் கயிறுகளாகவும், எலும்புகள் கருவிகளாகவும் பயன்படுகின்றன. கொழுப்பிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்; தோல்கள் கூடாரமாகப் பயன்படுகின்றன. இக்காரணங்களால் அம்மக்கள் இவ்விலங்குகளை மந்தை மந்தையாக வளர்க்கிறார்கள். இவ்விலங்குகள் அங்கு விளையும் பாசிச் செடிகளைத் தின்று உயிர் வாழும்.

லாப்லாந்து மக்கள் அகன்ற முகத்தைக் கொண்டவர்கள். அவர்களுடைய கண்கள் குறுகியவை. அவர்கள் தோலாடைகளை அணிவார்கள். தோலாடைகள் குளிரைத் தாங்க உதவுகின்றன. ஆண்கள் உடைக்கும் பெண்கள் உடைக்கும் அதிக வேறுபாடு இருப்பதில்லை.



லாப்லாந்து மக்கள் சக்கரமில்லாத ஒருவகை வண்டியில் செல்வார்கள். அவ் வண்டிக்கு 'ஸ்லெட்ஜ்' என்று பெயர். அவை நீண்ட படகு

போல் இருக்கும். அவ் வண்டிகளைக் கலைமான்கள் பனிக் கட்டிகளின் மேல் மிக எளிதாக இழுத்துச் செல்லும்.

பனி நில மக்கள் தங்கள் வீடுகளைப் பனிக் கட்டியால் அமைத்துக் கொள்வார்கள். அது



பார்வைக்கு ஒரு சிறு குன்றைப்போல் இருக்கும். ஒருகுழாய் போன்று அதன் வாயில் மிகக் குறுகலாக இருக்கும். அதற்குள்ளே அவர்கள் தவழ்ந்து செல்வார்கள். அவ்வீடுகளுக்கு 'இக்ளூ' என்று பெயர். பனிக்காலம் முழுவதும் அம்மக்கள் இப்பனிக்கட்டி வீடுகளிலேயே வாழ்வார்கள். கோடைக் காலத்தில் அவர்கள் தோலாலான கூடாரங்களில் வசிப்பார்கள்.

லாப்லாந்து மக்கள் பிராணிகளை வேட்டையாடிப் பிழைக்கின்றனர்! அங்கு ஸீல், வால்ரஸ், வெண்கரடி முதலியன வாழ்கின்றன. அவற்றின் இறைச்சியே அம்மக்களின் உணவாகும். அம் மக்கள் கடலில் மீன் வேட்டை ஆடச் செல்வதுண்டு. அதற்கு



அவர்கள் 'காயக்' என்ற ஒருவிதப் படகில் ஏறிச் செல்வார்கள்.

லாப்லாந்து சிறுவர்கள் இளமையிலேயே வேட்டையாடப் பழகுகிறார்கள். சிறுமிகள் தங்கள் தாய்மாரிடம் இருந்து, உணவு தயாரித்தல், உடை தைத்தல் முதலிய தொழில்களைக் கற்றுக் கொள்ளுகிறார்கள். இக்காலத்தில் அவர்கள் கல்வியும் கற்று வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| வடகோடி | பரந்த | நிலப்பகுதி |
| பனிக்கட்டி | பனிநிலம் | பாசி |
| கலைமான் | நரம்பு | கொழுப்பு |
| காரணம் | தோலாடை | தகடு |
| குன்று | கூடாரம் | வெண்கரடி |

73
031 B
N58

### பயிற்சி

**1. வினாக்கள் :**

1. லாப்லாந்துப் பகுதி எவ்வாறு இருக்கும்?
2. பனி நிலத்தில் வாழும் உயிர்ப்பிராணிகள் யாவை?
3. ரெயிண்டீர் மான்களைப் பனி நில மக்கள் ஏன் வளர்க்கிறார்கள் ?
4. ஸ்லெட்ஜ் என்பது என்ன ?
5. பனி நில மக்கள் இருப்பிடங்களை எப்படி அமைத்துக்கொள்ளுகிறார்கள் ?

**2. மொழிவளம் :**

மூடப்பட்டு, பல வகைகளிலும், கருவிகளாக, வேறுபாடு, எளிதாக, பார்வைக்கு—இச்சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுது.

137048

# 16. பண்டிகைகள்

இவ்வுலகம் மிகப் பரந்துள்ளது. இதில் வாழும் மக்கள் தனித்தனியான பழக்கவழக்கங்களை உடையவர்கள். அவர்கள் பலவிதமான மதங்களைத் தழுவி வாழ்கின்றார்கள். பற்பல கடவுள்களை வழிபடுகின்றார்கள். ஒவ்வொரு மதத்தாரும் ஒவ்வொரு வகையான பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள். சில பண்டிகைகள் எல்லோருக்கும் பொதுவாக வரும்.

பண்டிகை நாட்களில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அடைகிறார்கள். ஆண்களும், பெண்களும் குழந்தைகளுடன் நீராடி புத்தாடை அணிந்து, தங்களுக்குரிய கடவுளை வணங்கி வழிபடுவார்கள். நண்பர்களுடனும் சுற்றத்தார்களுடனும் கூடி விருந்துண்டு மகிழ்வார்கள்.

நமது நாட்டில் பல மதத்தார்கள் வாழ்கின்றனர். இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்துக்கள். இஸ்லாம் மதத்தினர் முஸ்லிம்கள் எனப்படுவர். இயேசுநாதர் மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர் கிருஸ்துவர் ஆவார்.

நபிகள் நாயகம் அவதரித்த நாள் முஸ்லிம் மக்களுக்கு ஒரு பண்டிகை நாள். இயேசுநாதர்

அவதரித்த நாள் கிருஸ்தவர்கட்கு உரிய பண்டிகை நாள். கண்ணபிரான், முருகன், பிள்ளையார் முதலிய கடவுள்களின் நாட்கள் இந்துக்களின் பண்டிகைகளில் சில ஆகும்.

ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு குறிப்பிட்ட நாள் உண்டு. ஆண்டுதோறும் தைமாதம் முதல்



நாள் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும். ஐப்பசி மாதம் தீபாவளி; புரட்டாசி மாதம் கலைமகள் விழா. கலைமகள் விழாவை நவராத்திரி என்பார்கள். டிசம்பர் மாதம் கிருஸ்துமஸ் பண்டிகை. இவ்வாறே முஸ்லிம்களின் முக்கியப்

பண்டிகைகளான *ரம்சான், பக்ரித்* பண்டிகை களும் ஒரு குறிப்பிட்ட நாட்களில் கொண்டாடப் படும்.

பொங்கல் பண்டிகை தமிழ் நாட்டில் இந்துக் களால் கொண்டாடப்படும் தலைசிறந்த பண்டிகை யாகும். இதை அறுவடை விழா என்றும் கூறு வார்கள். இப் பண்டிகையில் மக்கள் புதுப்பானை யில் புதிய அரிசி, வெல்லம், தேங்காய்களைக் கொண்டு சர்க்கரைப் பொங்கல் செய்வார்கள்; சூரியனுக்கு அதைப் படைத்து, உற்ருர் உறவின ருடன் உண்டு மகிழ்வார்கள்.

தீபாவளி அன்று மக்கள் அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடிப் புத்தாடைகளை அணிவார்கள். பலவிதமான பலகாரங்களை உண்டு மகிழ்வார்கள். சிறுவர்கள் வாணங்களைக் கொளுத்தி மகிழ்வார்கள். கலைமகள் விழா ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும். சில வீடுகளில் பெண்கள் பொம்மைக் கொலு வைப்பார்கள். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விழா நடை பெறும். அன்று வீடுகளில் எல்லாம் விளக்குகளை ஏற்றி அலங்கரிப்பார்கள். இவற்றைத் தவிர வேறு பல பண்டிகைகளையும் இந்துக்கள் கொண் டாடுகின்றனர்.


நம் நாட்டில் எல்லோருக்கும் பொதுவான சில பண்டிகை நாட்கள் உண்டு. அவை காந்தி அடிகள் பிறந்த நாள், நாம் சுதந்திரம் அடைந்த நாள், குடியரசு நாள் என்பனவாகும். அப் பண்டிகை நாட்களை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடி இன்புற வேண்டும்.

| | | |
|---|---|---|
| தனித்தனி | இஸ்லாம் | உற்சாகம் |
| பழக்கவழக்கங்கள் | விருந்து | அறுவடை |
| பலவிதமான | அவதரித்த | புத்தாடை |
| வழிபடுகின்றனர் | முஸ்லிம் | வாணம் |

பயிற்சி

**வினக்கள் :**

1. பண்டிகை நாளில் மக்கள் என்ன செய்கிறுர்கள் ?
2. நம் நாட்டில் உள்ள பல மதத்தார்கள் யார் யார் ?
3. முஸ்லிம், கிருஸ்துவர், இந்துக்கள் இவர்களுடைய பண்டிகைகளில் ஒவ்வொன்று சொல்லு.
4. பொங்கல் பண்டிகையின் வேறு பெயர்கள் என்ன?
5. எல்லோருக்கும் பொதுவான பண்டிகைகளில் சில கூறு.




# 17. கடைத்தெரு

[உரையாடல்]

[கண்ணன் தன் தந்தையுடன் கடைத்தெருவிற்குச் செல்லுகிறான்.]

**கண்ணன்:** அப்பா ! ஏன் இந்தத் தெருவில் மட்டும் இவ்வளவு கடைகள் இருக்கின்றன ?

**தந்தை:** கண்ணா! இது கடைத்தெரு அல்லவா? மக்கள் பலரும் அவரவர்களுக்கு வேண்டியபொருள்களை வாங்க இங்கு வருகிறார்கள். அதனால் தான் இங்கே பலகடைகள் இருக்கின்றன.

**கண்ணன்:** அப்பா! தங்கை கண்ணகிக்குச் சட்டை வேண்டுமாம். அதற்குத் துணி வேண்டுமே? அதை எங்கே வாங்குவது?

**தந்தை:** அதோ அந்தக் கடையில் தொங்கிக்கொண்டிருக்கும் விளம்பரப் பலகையைப் பார். அதுதான் துணிக்கடை. அந்தக் கடையில் நமக்கு வேண்டிய வேட்டி, புடவை, சட்டைத் துணி, பாவாடைத் துணி, போர்வை முதலியன வாங்கலாம்.

**கண்ணன்:** அப்பா, அதோ பாருங்கள். துணிக்கடைக்குப் பக்கத்தில் என்ன கடை இருக்கிறது என்று நான் சொல்லட்டுமா?


**தந்தை:** எங்கே சொல்! பார்ப்போம்.

**கண்ணன்:** அது மிட்டாய்க்கடை. சரிதானே அப்பா?

**தந்தை:** ஆமாம். இதோ பார்! காய்கறிக் கடை. இந்தக் கடையில் உள்ள காய்கறிகளைப் பார். இந்தக் கடையில் நமக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு செல்லுவோம்.

**கண்ணன்:** அப்பா! உப்பு, புளி, மிளகாய், சர்க்கரை முதலியவற்றை நாம் எங்கே வாங்குகிறோம்?

**தந்தை:** கண்ணு! நாம் அவற்றை மளிகைக் கடையில் வாங்குகிறோம். உப்பு, புளி, சர்க்கரை, முதலியவை மளிகைப் பொருள்கள் என்று சொல்லப்படும். மளிகைக் கடைக்கு அருகில் இருப்பது பாத்திரக்கடை ஆகும்.




**கண்ணன்:** இங்கே பாருங்கள் அப்பா. இந்தப் பழக்கடையை.

**தந்தை:** பழங்கள் எவ்வளவு அழகாக அடுக்கப்பட்டிருக்கின்றன பார். இங்கு எல்லா விதமான பழங்களும் கிடைக்கும்.

**கண்ணன்:** புத்தகங்களை எங்கே வாங்கலாம் அப்பா?

**தந்தை:** அவற்றைப் புத்தகக் கடையில் வாங்கலாம். நமக்கு வேண்டிய காகிதம், எழுது

கோல், பேனா, கற்பலகை முதலியனவும் வாங்கலாம். நீ மேசை வேண்டும் என்று கேட்டாய் அல்லவா? அது மரச்சாமான்கள் விற்கும் கடையில் கிடைக்கும், வாங்கலாம் வா.

[இருவரும் செல்கிறார்கள்]

| | | |
|---|---|---|
| கடைகள் | பாத்திரக்கடை | ஏற்றது |
| மளிகை | மளிகைக்கடை | விற்கப்படும் |
| விளம்பரம் | மிட்டாய்க்கடை | புத்தகக்கடை |

பயிற்சி

*1.* ***வினாக்கள் :***

1. மளிகைக் கடையில் என்னென்ன சாமான்கள் கிடைக்கும் ?
2. கடைத்தெருவில் என்னென்ன கடைகளைக் காண முடியும் ?

2. ***மொழிவளம் :***

1. பொருத்தமான வினைச் சொற்களை எடுத்து எழுது:

(1) கண்ணன் பாடம் ——— .
[படிக்கிறான், படிக்கிறாள், படிக்கிறது]

(2) வள்ளி கோலம் ———
[போடுகிறாள், போடுகிறான்.]

(3) பிள்ளைகள் வரிசையாக ———
[நிற்கின்றன, நிற்கிறார்கள், நிற்கிறான்]

(4) மரம் உயர்ந்து ———
[வளர்கிறது, வளர்கின்றான், வளர்கின்றாள்]

(5) பழங்கள் தட்டில் ———
[இருக்கின்றது, இருக்கின்றன, இருக்கின்றார்கள்.]



# 18. சாலமன் அரசர்

முன்னொரு காலத்தில் சாலமன் என்ற அரசர் ஒருவர் இருந்தார். அவர் பேரறிவு படைத்தவர். எந்தப் பொருளையும் கூர்ந்து நோக்கி முடிவு காணுவார். எதையும் அவசரப் பட்டுச் சொல்ல மாட்டார்; நன்ருக ஆராய்ந்து பார்த்துத்தான் பேசுவார். ஆகையால், அவர் சொல்வதில் தவறே இருப்பதில்லை. அதனால், அவர் புகழ் நாடெங்கும் பரவியது. அவரை எல்லோரும் ஞானவான் சாலமன் என்று போற்றினர்கள்.

சாலமன் ஆண்டுவந்த நாட்டிற்கு வெகு தொலைவில் ஷேபா என்ற ஒரு சிறு நாடு உண்டு. அந்த நாட்டை ஓர் அரசி ஆண்டு வந்தாள்.

அவள் சாலமன் அரசரின் அறிவுத்திறனைப்பற்றிக் கேள்விப்பட்டாள். அவரை நேரிற்கண்டு, அவர் அறிவின் சிறப்பை ஆராய்ந்து அறிய ஆவல் கொண்டாள். அதன்படி அவள் சாலமன் மன்னரின் நாட்டை அடைந்து, அரசனை நேரிற் கண்டாள்.

சாலமன் அரசர் ஷேபா நாட்டு அரசியை அன்புடன் வரவேற்று மரியாதை செய்தார். அரசியாரும் சாலமன் மன்னரை வணங்கித் தாம் கொண்டு வந்திருந்த பல பரிசுப் பொருள்களையும் அவரிடம் அளித்தாள். அவரும் அவற்றை அன்போடு ஏற்றுக்கொண்டார்.

பிறகு அரசி மன்னரிடம் தாம் கொண்டுவந்திருந்த இரண்டு மலர்மாலைகளைக் காட்டி, "அரசே! இந்த மாலைகள் இரண்டிலும், உண்மையான மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை எது என்று தாங்கள் அங்கிருந்தபடியே கண்டறிந்து சொல்ல வேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள்.

அந்த மாலைகள் இரண்டும் பார்வைக்கு ஒரே மாதிரியாகக் காணப்பட்டன. மன்னருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரம் சிந்தித்தார். வேலைக்காரனை அழைத்துச் சன்னலைத் திறக்கும்படி கூறினர். சன்னலைத் திறந்தவுடன் அவ்வழியாகச் சில தேனீக்கள் உள்ளே நுழைந்தன. அந்த ஈக்கள் அரசியார் வைத்திருந்த மாலைகளில்

ஒன்றின்மீது மொய்க்கத் தொடங்கின. அதைப் பார்த்தார் சாலமன். உடனே அவர் அரசியாரிடம்



அந்த மாலையைச் சுட்டிக்காட்டி, அதுதான் உண்மையான மாலை என்று கூறினர்.

அரசியார் மன்னரின் நுண்ணறிவைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். அவரைப் பலவாறு போற்றினர். சில நாட்கள் அங்கேயே தங்கி யிருந்து அவர் அறிவின் சிறப்பை நாள்தோறும் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். பிறகு மன்னரிடம் விடைபெற்றுத் தம் நாட்டை அடைந்தார்.

| | | |
|---|---|---|
| முன்னெரு | ஆராய்ந்து | அறிவுத்திறன் |
| பேரறிவு | நாடெங்கும் | இருந்தபடி |
| கூர்ந்து | ஞானவான் | உண்மையான |
| அவசரம் | தொலைவு | கண்டறிந்து |
| ஒரேமாதிரி | நுண்ணறிவு | சுட்டிக்காட்டி |

## *1. வினுக்கள் :*

1. சாலமன் அரசரை ஞானவான் என்று எதனுல் மக்கள் கூறினுர்கள் ?

2. ஷேபா நாட்டு அரசி சாலமனிடம் வரக் காரணம் என்ன ?

3. சாலமன் அரசரின் நுண்ணறிவை அரசி எவ்வாறு கண்டறிந்தாள் ?

## *2. மொழிவளம் :*

1. கோடிட்ட இடங்களில் சரியான வினைச்சொற்களை அமை:


(1) நான் நேற்றுப் பாடம் ———
[படித்தேன், படிக்கிறேன், படிப்பேன்.]

(2) அவர் இப்பொழுது கடிதம் ———
[எழுதினுர், எழுதுகிருர், எழுதுவார்.]

(3) கமலம் நாளைக்கு ஊருக்குப் ———
[போனுள், போகிருள், போவாள்.]

2. தெரிந்துகொள்:

நடக்கிருன், நடக்கிருள், நடக்கிருர்கள், நடக்கிறது, நடக்கின்றன. இந்த வினைச் சொற்களுக்குப் பிற காலங்களையும் எழுதித் தெரிந்து கொள்.



# 19. தென்னை மரம்

தென்னை மரம் உயர்ந்து நீண்டு வளரும் ஒரு வகை மரமாகும். அது ஏறக்குறைய அறுபது அடி உயரம் வளரும். அதற்குக் கிளைகள் இல்லை. அதன் உச்சியில் பத்துப் பன்னிரண்டு மட்டைகள் இருக்கும். மட்டைகளின் இடையில் பாளைகளில் தேங்காய்கள் குலை குலையாகக் காய்க்கும்.

தென்னையின் அடி மரத்தில் நெடுக வரைகள் இருப்பதைக் காணலாம். அவை மட்டைகள் ஒட்டிக்கொண்டிருந்த இடங்களாகும். மட்டைகள் உலர்ந்து வாடி விழுந்தபின் அவை இருந்த இடங்கள் இவ்வாறு காணப்படுகின்றன.

தென்னை மரம் மணற்பாங்கான இடங்களில் நன்றாக வளரும். உப்பும், மீனும் அதற்கு நல்ல எருவாகும், நன்றாக முற்றின மட்டையோடு கூடிய தேங்காய்களை நாற்று விடுவார்கள். அந்தத் தேங்காயிலிருந்து முளைகள் தோன்றி வளர்ந்து வரும். அப்போது அவை தென்னம் பிள்ளைகள் எனப்படும்.

தென்னம் பிள்ளைகளை ஆழமான குழிகளில் பதினைந்து அடிக்கு ஒன்றாக நட்டுத் தண்ணீர் பாய்ச்சி வருதல் வேண்டும். ஆறு ஆண்டுகளில் தென்னை வளர்ந்து காய்க்கத் தொடங்கும்.

தென்னை நமக்குப் பல வகைகளில் பயன் படுகிறது. அதன் அடிமரம், கூரை வீடுகளுக்கு உத்திரங்களாகவும், விட்டங்களாகவும் உதவு கின்றன. அதன் மட்டைகளில் உள்ள இலைகள், ஓலைகள் எனப்படும். ஓலைகளைக் கீற்றுகளாக முடைவார்கள். அந்தக் கீற்றுகள் கூரைவேய உதவும். தென்னம் பாளைகளைக் கிழித்துக் கூரை வேய்வதற்காகப் பயன் படுத்தலாம்.

பாளைகளில், தேங்காய்கள் முதலில் சிறு உருண்டைகளாகக் காணப்படும். அப்போது அவை குரும்பைகள் எனப்படும். அவை பெரி தாகித் தேங்காய்கள் ஆகும். முற்றாத தேங்காய் இளநீர் எனப்படும். முற்றின தேங்காய் சமை

யலுக்கு உதவும். அதனைக் கலந்து பல தின் பண்டங்களும் செய்வார்கள். தேங்காய்ப்பருப்பை எடுத்து உலர்த்திச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள். அந்த எண்ணெய் **தேங்காய் எண்ணெய்** எனப்படும். அது பலகாரம் செய்வதற்கும், சோப்புச் செய்வதற்கும் பயன்படும்.

தேங்காயின் மேல் உள்ள மட்டை உரிமட்டை எனப்படும். அதிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரிப்பார்கள். அந்த நாரைக் கொண்டு விரிப்பு, கால்மிதி முதலியவற்றைச் செய்வார்கள். தேங்காய்ப் பருப்பின் மேலுள்ள ஓடு கொட்டாங் கச்சி எனப்படும். அது அகப்பை செய்ய உதவும்.

தென்னை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் இப் படிப் பலவகைகளில் உதவுவதால் அதைக் கற்பக மரம் என்று கூறுகிறோம்.

| | | |
|---|---|---|
| ஏறக்குறைய | இடையில் | உலர்ந்து |
| முளைகள் | வரை | உத்திரம் |
| விட்டம் | நெடுக | குரும்பை |
| பாளை | பருப்பு | கற்பகம் |

### பயிற்சி

**1. வினாக்கள் :**

1. தென்னை எப்படிப்பட்ட இடங்களில் பயிராகும்?

2. தென்னையைப் பயிராக்குவது எப்படி ?
3. தென்னை மரத்தின் பாகங்கள் எவை ?
4. தென்னை மரத்தைக் கற்பக மரம் என்று ஏன் சொல்லுகிறார்கள் ?

## 2. மொழிவளம் :

தெரிந்துகொள் :

தென்னை + பிள்ளை = தென்னம்பிள்ளை
தென்னை + பாளை = தென்னம்பாளை
தென்னை + காய் = தேங்காய்

# 20. சிரித்த முல்லை

மாலைப் போதில்
சோலையின் பக்கம்
சென்றேன்; குளிர்ந்த
தென்றல் வந்தது.
வந்த தென்றலில்
வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த
வசத்தில் திரும்பினேன்.
சோலை நடுவில்
சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு
படர்ந்து கிடந்து
குலுக்கென்று
சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன்
மகிழ்ச்சிகொண் டேனே!

—பாரதிதாசன்

# 21. எதிர் இல்லா ஏற்றப்பாட்டு

[மௌனப் பாடம்]

[இப்பாடத்தைப்படி, கீழே உள்ள விளுக்களுக்கு விடை எழுது]

'கல்வியில் பெரியவர்' கம்பர் என்பது ஒரு முதுமொழி. கம்பர் சுமார் எண்ணூறு ஆண்டு களுக்குமுன் நமது நாட்டில் வாழ்ந்தவர். சோழ நாட்டில் திருவழுந்தூர் என்ற ஓர் ஊர் இருக் கிறது. அந்த ஊரில்தான் கம்பர் பிறந்தார். இவர் பல நூல்கள் எழுதியிருக்கிறூர். அவற்றில் இராமாயணம் என்ற நூலே புகழ் பெற்றது ஆகும். கம்பரை அக்காலத்தில் இருந்த மன்னர்கள் ஆதரித்து வந்தார்கள். இவருடைய பெருமையை உணர்ந்த மக்கள் இவரைக் கவிச் சக்கரவர்த்தி என்று இன்றும் பாராட்டிப் புகழ்கின்றூர்கள்.

கவிச் சக்கரவர்த்தியான கம்பர் ஒரு நாள் தனியே ஓர் ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது மாலே நேரம். ஒரு தோட்டத்தில் ஏற்றம் இறைப்பவர்கள் நீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள். ஏற்றம் இறைப்பவர் களேப்புத் தோன்றுமல் இருப்பதற்காகப் பாடுவது உண்டு. அவ்வாறே அவர்களும் "மூங்கில் இலே மேலே தூங்கும்" என்று பாடினர். அதற்குள் பொழுது போய்விட்டபடியால் அவர்கள் வேலேயை நிறுத்திவிட்டனர். பாட்டும் அந்த அளவிலேயே நின்றுவிட்டது.

அந்தப் பாட்டை அவ்வழியாக வந்த கம்பர் கேட்டார். அந்தப் பாட்டை முடிக்கவேண்டும் என்று அவர் கருதினர். அடுத்த அடி எப்படியாக இருக்கவேண்டும் என்று நீண்ட நேரம் யோசித்தார். ஒரு முடிவும் தோன்றவில்லை. ஆகையால், அதன் முடிவை அவர்களைக் கொண்டே அறியவேண்டும் என்று நினைத்தார். அதற்காக அன்று இரவு முழுவதும் அங்கேயே தங்கியிருந்தார்.

மறு நாள் அதிகாலையில் அவ்வேலையாட்கள் வந்து மீண்டும் நீர் இறைக்கத் தொடங்கினர்கள். பாட்டையும் விடுபட்ட இடத்திலிருந்து பாட ஆரம்பித்தார்கள்.

"மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரே
ஓங்குகதி ரோனே! வாங்கு பனி நீரே"

என்று பாட்டை முடித்தார்கள்.

இந்த முடிவுகம்பருக்குமிகவும்பொருத்தமாகத் தோன்றியது. பாட்டின் ஓசை,பொருள் பொருத்தம் முதலியவற்றையும் அவர் அறிந்து பெருமகிழ்ச்சி கொண்டார். "இப்பாட்டு எதிரில்லா ஏற்றப் பாட்டு" என்று அதனைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

பயிற்சி

**1. வினக்கள் :**

1. கம்பரின் பெருமையை எழுது.
2. ஏற்றம் இறைப்பவர்கள் ஏன் பாடவேண்டும்?
3. கம்பர் ஏற்றப் பாட்டை ஏன் புகழ்ந்தார் ?



## 22. ஏமாந்த திருடர்கள்

தெனாலி என்ற ஊரில் இராமன் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் கூர்மையான அறிவு படைத்தவன்; வேடிக்கையாகப் பேசுவான். அரச சபையில் தன் பேச்சின் திறத்தால் எல்லோரையும் சிரிக்கச் செய்வான். அரசரும் மகிழ்ந்து அவனுக்குப் பரிசுகள் தருவார். அவன் தெனாலி ராமன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டான்.

இராமன் அரசரின் ஆதரவால் பெருஞ் செல்வன் ஆனான். அவனிடம் நிறைந்த செல்வம் இருப்பதை அறிந்த சில திருடர்கள் ஒருநாள் இரவில் அவன் வீட்டில் திருடுவதற்காக வந்தார்கள். அவர்கள் எல்லோரும் உறங்கிய

பிறகு வீட்டிற்குள் நுழையலாம் என்று நினைத்துத் தோட்டத்தில் ஓரிடத்தில் மறைந்துகொண்டிருந்தார்கள்.

திருடர்கள் மறைந்திருப்பதைத் தெனாலி ராமன் அறிந்துகொண்டான். அவர்களை எப்படி யாவது ஏமாற்ற வேண்டும் என்று முடிவு செய்தான். தன் மனைவியிடம் இரகசியமாக ஏதோ கூறினான். பிறகு அறைக்குள்ளே ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தான்.

இராமன் தன் மனைவியை அழைத்து, உரத்த குரலில், "ஊரில் திருடரின் தொல்லை மிகுதியாக இருக்கிறது. நம்மிடம் இருக்கும் நகைகள், முதலியவற்றை நாம் பத்திரப்படுத்த வேண்டும். அவற்றை எல்லாம் எடுத்துவா. இந்தப் பெட்டியில் போட்டுப் பூட்டி, நம் கொல்லைப் புறத்தில் உள்ள கேணியில் யாருக்குந் தெரியாமல் போட்டு வைப்போம். பிறகு தேவைப்படும்போது எடுத்துக்கொள்ளுவோம்" என்று கூறினான்.

இவர்கள் இவ்வாறு பேசிக் கொள்வதைக் கொல்லைப் புறத்தில் ஒளிந்து கொண்டிருந்த திருடர்கள் கேட்டனர். எளிதாகச் செல்வங்களை எடுத்துச் சென்று விடலாம் என்று களிப்போடு இருந்தார்கள்.

இராமனும் அவன் மனைவியும் அப்பெட்டிக்குள் கனமான கற்களைப் போட்டுப் பூட்டினார்கள்.

பிறகு இருவரும் அப்பெட்டியை எடுத்துச் சென்று தோட்டத்தில் இருந்த கிணற்றுக்குள் போட்டார்கள்.

திருடர்கள் இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இராமனும் அவன் மனைவியும் வீட்டிற்குள் சென்றவுடன், மறைவிடத்தை விட்டு வெளியே வந்து கிணற்றருகில் சென்றார்கள். திருடர்களில் ஒருவன் கிணற்றில் மூழ்கிப் பெட்டியை எடுக்க முயன்றான். கிணற்றில் நீர் அதிகம் இருந்தபடியால் பெட்டியை வெளியில் எடுத்து வர முடியவில்லை. ஆகையால், அவர்கள் கிணற்றின் நீரை இறைக்கத் தொடங்கினார்கள்.

அப்போது தெனாலிராமன் அவர்களுக்குத் தெரியாமல் தோட்டத்திற்குள் புகுந்து அந்த நீரைச் செடிகளுக்குப் பாய்ச்சத் தொடங்கினான். கிணற்றில் தண்ணீர் வற்றாமல் ஊறிக் கொண்டே இருந்தது. திருடர்களும் விடாமல் இறைத்துக் கொண்டே இருந்தார்கள்.

பொழுது விடிய ஆரம்பித்தது. வெளிச்சத்தைக் கண்ட திருடர்கள் பயந்து ஏற்றம் இறைப்பதை நிறுத்தி ஓடத் தொடங்கினார்கள். அப்போது இராமன் அவர்களைப் பார்த்து, "நண்பர்களே! பொழுது விடிந்துவிட்டது; எல்லாச் செடிகளுக்கும் நான் தண்ணீர் பாய்ச்சி விட்டேன். நீங்கள்

செய்த உதவிக்கு நான் நன்றி உடையவனாக இருக்கிறேன்" என்றான்.

திருடர்கள் ஏமாந்து ஓடிவிட்டார்கள். ஊரார் இராமனின் திறமையைப் புகழ்ந்தார்கள்.

| | | |
|---|---|---|
| வேடிக்கை | ஏமாற்ற | நன்றி |
| ஆதரவு | இரகசியம் | மறைவிடம் |
| வற்றாமல் | எளிதாக | திறமை |

## பயிற்சி

*1.* **வினாக்கள் :**

1. திருடர்களைக் கண்ட இராமன் என்ன செய்தான் ?
2. திருடர்கள் தண்ணீரை ஏன் இறைத்தார்கள் ?
3. திருடர்களிடம் இராமன் என்ன தெரிவித்தான் ?


*2.* ***மொழிவளம் :***

தெரிந்து கொள் :

புலி போலப் பாய்ந்தான்
கண்ணன் அருகில் நிற்கிறான்

இந்த வாக்கியங்களில் புலி, கண்ணன் என்ற சொற்கள் பெயர்ச் சொற்கள் என்றும்; பாய்ந்தான், நிற்கிறான் என்ற சொற்கள் வினைச் சொற்கள் என்றும் நீங்கள் அறிவீர்கள்.

போல, அருகில் என்ற சொற்கள் பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் அன்று. ஆனால், இவ்விதமான சொற்கள் வாக்கியங்களில் கலந்து வருவதைக் காண்பீர்கள். அவற்றை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.



## 23. ஊராட்சி

தகப்பனர், தாயார், குழந்தைகள் இவர்களைக் கொண்டிருப்பது ஒரு குடும்பம். ஒரு குடும்பத்தின் தலைவர் தகப்பனர். இவ்வாறு பல குடும்பங்களைக் கொண்டிருப்பது கிராமம். கிராமத்தை ஊர் என்பார்கள். ஒரு கிராமத்தின் தலைவர் ஊர்த் தலைவர் ஆவார். அவரை மணியக்காரர் என்றும், பெரியதனக்காரர் என்றும். கிராம முனிசீபு என்றும் கூறுவார்கள். முனிசீபு என்பதற்கு நீதிபதி என்று பொருள்.

கிராமத்தின் ஆட்சி ஊராட்சி எனப்படும். ஊராட்சி முழுவதும் ஊர்த் தலைவரால் கவனிக்கப்

படுகிறது. அவருக்கு உதவியாக ஊர்க் கணக்கர், தலையாரி, வெட்டியான் என்பவர்கள் வேலை செய்கின்றனர்.

ஊர்த் தலைவர் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய நிலவரியைத் தண்டல் செய்து அரசாங்கக் கருவூலத்திற்கு அனுப்புவார். அவ்வாறு தண்டல் செய்வதில் தலையாரியும் ஊர்த் தலைவருக்கு உதவி செய்வார். கிராமத்தில் ஏற்படும் பிறப்பு இறப்புக்களைப் பற்றிய குடிமதிப்புக் கணக்குகளை வைத்திருப்பவரும் இவரே. மேலும் கிராமத்தில் மக்கள் செய்யும் சிறு குற்றங்களை அவர் விசாரித்துக் குற்றஞ் செய்தவர்களுக்குத் தக்க அபராதம் விதிப்பார்; பெரிய குற்றங்கள் நடந்தால் அவற்றை மேலதிகாரிகளுக்குத் தெரிவிப்பார்.

கிராமத்தில் உள்ள நிலங்களைப் பற்றிய முழு விவரங்களையும் எழுதி வைத்திருப்பவர் ஊர்க் கணக்கர் ஆவார். நிலங்களுக்கு உரியவர் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டிய நிலவரியை எழுதி ஊர்த்தலைவரிடம் கொடுப்பார்; செலுத்தப் பட்ட வரிப்பணத்திற்குக் கணக்கு வைத்துக் கொள்ளுவார். நிலங்களை அளப்பதற்கு அவரிடம் ஒரு சங்கிலியும், நீண்ட கோலும் இருக்கும். நிலங்களை அளக்கும்பொழுது ஊர்க் கணக்கருக்கு வெட்டியான் உதவி செய்வார்.

தலையாரி கிராமத்தைக் காவல் புரிவார். அதனுல் அவர் ஊர்க்காவலர் என்றும் சொல்லப் படுகிருர். மணியக்காரர் தண்டல் செய்யும் வரிப் பணத்தை வெட்டியான் மூலம் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்துவார். ஊர்த்தலைவர் ஊராருக்குச் சொல்லவேண்டிய செய்திகளைப் பறையடித்து அவர்களுக்குத் தெரிவிப்பது வெட்டியானின் வேலையாகும்.

இவர்கள் அனைவரும் கிராம ஊழியர்கள் என்று சொல்லப்படுவார்கள். இவர்கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுகிருர்கள். இவர்கள் மாதா மாதம் அரசாங்கத்திலிருந்து ஊதியம் பெறுகிருர்கள்.

கிராமங்களில் தெருக்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல், கல்விச்சாலைகளை ஏற்படுத்துதல், சுகாதாரத்தைக் கவனித்தல், கிராமப் பொதுக்காரியங்களைப் பார்ப்பது முதலான வேலைகளை ஊராட்சிக் கழகம் என்ற கழகம் பார்த்து வருகின்றது. இக்கழகத்தைப் பஞ்சாயத்துச் சபை என்பார்கள். கிராம மக்கள் வாக்குக் கொடுத்து அதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களால் இக்கழக வேலைகள் நடைபெறுகின்றன. இவர்களுக்குச் சம்பளம் இல்லை. கிராம ஊழியர்களும், ஊராட்சிக் கழகத்தினரும் கிராமங்களை ஆட்சி புரிகின்றனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | ஊராட்சி | கருவூலம் |
| தனக்காரர் | நிலவரி | குடிமதிப்பு |
| முனிசீபு | தண்டல் | அபராதம் |
| விவரம் | உரியவர் | பறை |
| ஊழியர் | ஊதியம் | கழகம் |
| பஞ்சாயத்து | சபை | வாக்கு |

## பயிற்சி

**1. வினாக்கள் :**

1. கிராமத்தலைவரை எவ்வெவ்வாறு அழைப்பார்கள்?
2. ஊர்த் தலைவரின் வேலை என்ன ?
3. ஊர்க் கணக்கர் வேலை யாது ?
4. தலையாரி, வெட்டியான் இவர்களுடைய வேறு பெயர் என்ன ? இவர்களுடைய முக்கியமான வேலை என்ன ?
5. ஊராட்சிக் கழகத்தின் வேலை என்ன ?

**2. மொழி வளம் :**

பின்வரும் சொற்களின் பொருள்களைத் தெரிந்துகொள்:

உரியவர் — சொந்தக்காரர்
ஊதியம் — சம்பளம்
கருவூலம் — கஜானா
கழகம் — சபை
குடிமதிப்பு — ஜனத்தொகை
தண்டல் — வசூல் செய்தல்
பறை — தம்பட்டம்
தனம் — செல்வம்
மணியம் — மேற்பார்வை
வாக்கு — ஓட்டு

# 24. நீராவியின் ஆற்றல்


நாம் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்ல வேண்டுமானால் இக்காலத்தில் புகை வண்டியில் செல்லுகிறோம். ஆனால், நமது முன்னோர்கள் அக்காலத்தில் கால் நடையாகவே நடந்து பயணம் செய்து வந்தார்கள். பிறகு மாட்டு வண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும் ஏறிச் சென்றனர்.

எவ்வளவு சிறந்த எருதாக இருந்தாலும் மணிக்கு ஐந்து அல்லது ஆறு மைல்களுக்கு மேல் அதனால் செல்ல முடியாது. குதிரை வண்டிகளும் மணிக்குப் பத்து, அல்லது பன்னிரண்டு மைல்கள் வரையில் தான் செல்ல முடியும். நீண்ட தூரம் பயணம் செய்யும் பொழுது, நடுவழியில் தங்க வேண்டும். தங்குமிடங்கள் எங்கும் வசதியாகக் கிடைக்க மாட்டா. இரவிலோ கள்வர்களைப்பற்றி அச்சம்; பயணத்தை விரைவாகவும் முடிக்க முடியாது; செலவும் அதிகமாகும். இவ்வளவு துன்பங்களும் இப்பொழுது புகை வண்டியால் நீங்கிவிட்டன.

புகை வண்டி எதனால் விரைவாகச் செல்லு கிறது? நீராவியின் ஆற்றலால் புகை வண்டியில் உள்ள எஞ்சின் ஓட்டப் படுகிறது. அது மற்ற பெட்டிகளை இழுத்துக் கொண்டு விரைவாக

ஓடுகிறது. நீராவிக்கு இவ்வாறு எந்திரங்களை ஓட்டக் கூடிய ஆற்றல் உண்டு என்பதைக் கண்டறிந்தவர் **ஜேம்ஸ் வாட்** என்ற ஆங்கிலேயர் ஆவார்.

ஜேம்ஸ் வாட் சிறுவராக இருக்கும் பொழுது ஒரு நாள் தமது வீட்டின் அடுக்களையின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்போது அடுப்



பின் மேல் வெந்நீர்க் கெட்டிலின் மூடியானது 'பட பட' என்று குதிப்பதைக் கண்டார். சற்று நேரத்தில் அம்மூடி தூக்கி எறியப்பட்டது. கெட்டிலில் இருந்து ஆவி வெளியே போவதைக் கண்டார்.

கெட்டிலின் மூடி விழுந்ததன் காரணம் என்ன என்று ஜேம்ஸ் எண்ணத் தொடங்கினர். "நீரைக் காய்ச்சினுல், அது ஆவியாக மாறும். அந்த ஆவி மேலே எழுந்து செல்லக்கூடியது. அதனைத் தடுத்து நிறுத்தினுல், அது பொருள்களைத் தள்ளக் கூடிய ஆற்றலைப் பெறும்" என்று கண்டறிந்தார்.

ஜேம்ஸ் வாட் இக்கருத்தையே ஆதாரமாகக் கொண்டு, நீராவியால் எந்திரங்களை ஓட்டிக் காண்பித்தார். அவர் காலத்தில் நீராவியின் ஆற்றலால் புகைவண்டி ஓடவில்லை. ஆயினும் அவருக்குப்பின், ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்ற பெரியார் ஒருவர் ஆங்கிலேய நாட்டில் தோன்றினர். அவர் நீராவியின் ஆற்றலைக் கொண்டு வண்டித் தொடர்களை இழுக்கக்கூடிய எஞ்சினை ஓட்டிக் காட்டினர்.

புகை வண்டி இரும்புத் தண்டவாளங்களின் மேல் ஓடுகிறது. புகை வண்டி ஓடும் பாதையை இரயில் பாதை அல்லது இருப்புப் பாதை என்று சொல்லுகிறோம்.

| | | |
|---|---|---|
| முன்னோர்கள் | சிறந்த | விரைவாக |
| எவ்வளவு | முடியும் | முடிக்க |
| தங்குமிடம் | பயணம் | கள்வர் |
| துன்பங்கள் | ஆற்றல் | புகைவண்டி |
| எறியப்பட்டது | எஞ்சின் | அடுக்களை |
| கெட்டில் | எண்ண | ஆவி |
| கண்டறிந்தார் | ஆதாரம் | தண்டவாளம் |

## பயிற்சி

### 1. வினாக்கள் :

1. பழங்காலத்தில் எவ்வாறு பயணம் செய்து வந்தார்கள் ?

2. புகைவண்டியால் நீங்கிய துன்பங்கள் யாவை ?

3. நீராவியின் ஆற்றலைக் கண்டுபிடித்தவர் யார் ?

4. புகைவண்டியின் எஞ்சின் எதனல் ஓட்டப் படுகிறது ?

5. புகைவண்டித் தொடரை ஓட்டிக் காட்டியவர் யார்?

### 2. மொழிவளம் :

தகுதியான வார்த்தைகளைப் பொருத்தி எழுது :

(1) புகைவண்டி ———— ஓடுகிறது.
[நீராவியால், எண்ணெயால்]

(2) புகைவண்டியை ———— ஓட்டிக்காட்டினர்.
[ஜேம்ஸ்வாட், ஜார்ஜ் ஸ்டீவன்சன்]

(3) நீராவிக்குத் தள்ளக் கூடிய ஆற்றல் ————
[உண்டு, இல்லை]

(4) பழங்காலத்தில் நாம் ———— பயணம் செய்தோம். [புகைவண்டியில், நடந்து]

# 25. மழை

1. கொட்டி டுவாய்மழையே—நாங்கள்
குதூகல மெய்திடவே.
சொட்டுச்சொட் டாய்த்தொடங்கி—மழையே
'சோ'வெனப் பெய்திடுவாய்.

2. காரிருள் மேகமதாய்—அலைபோல்
காற்றினில் சென்றிடுவாய்.
மீறிநீ சென்றிடாது—மலைகள்
மோதிடப் பெய்திடுவாய்.

3. சூரிய வெப்பமதால்—வாடிச்
சுருண்ட பயிர்களெல்லாம்
நேரிய உன்செயலால்—நன்கு
நின்று தலைதூக்கும்.

4. வாரிப் பொருளையெல்லாம்—நன்கு
வழங்கி நிற்போரை,
மாரிபோ லப்பொழிவார்—என்றே
வாழ்த்தும் மனிதகுலம்.

5. கப்பல்கள் விட்டிடவே—நாங்கள்
காகிதம் சேர்த்துவைத்தோம்.
தப்பியே ஓடிடாதே—கொஞ்சம்
தயவுடன் பெய்திடுவாய்.

—அழ. வள்ளியப்பா

# 26. கடிதம் எழுதுதல்

ஒருவர் மற்றொருவருக்குத் தம் எண்ணங்களை நேரில் தெரிவிப்பது போல், ஒரு தாளில் எழுதி அனுப்பலாம். இவ்வாறு எழுதப்படும் கடிதங்களில் **அழைப்புக் கடிதம், விண்ணப்பக் கடிதம், சமூகக் கடிதம், வியாபாரக் கடிதம்** எனப் பல வகை உண்டு.

சமூகக் கடிதம்: பெரியவர் சிறியவர்களுக்கு எழுதுவது.

12, மேலமாசி வீதி,
மதுரை.
24—2—1958.

அருமை முருகா,

வாழ்க. நலம். நலம் அறிய விரும்புகிறேன். உன் கடிதம் கிடைத்தது. நீ எல்லாப் பாடங்களிலும் முதல்வனாக இருப்பதை அறிந்து, நானும் உன் மாமியும் மிகவும் மகிழ்கின்றோம். ஆனாலும் உன் கையெழுத்து நன்றாக இல்லை.

கையெழுத்து நன்றாக இல்லாவிடில் உன்னை யாரும் மதிக்கமாட்டார்கள். ஆகையால் கையெழுத்தை நன்றாக எழுதப் பழகு. அதற்கு ஒரு வழி கூறுகிறேன் கேள். எழுத்துக்களைச் சங்கலித் தொடர்போல் சேர்த்து எழுதாதே. ஒவ்வொரு சொல்லுக்கும் இடம் விட்டு எழுது. வாக்கியம் முடிந்ததும் முற்றுப்புள்ளி இட வேண்டும்.

எழுதும் வரிகள் நேராகவும் ஒழுங்காகவும் இருக்கவேண்டும். முதலில் இரட்டைக் கோடுகள் அமைந்துள்ள நோட்டுப் புத்தகங்களில் எழுதப் பழகு. பிறகு ஒற்றைக் கோடுகளில் எழுதலாம். கையெழுத்தைச் சிறுவயதிலேயே நன்ருக எழுதப் பழக வேண்டும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது".

அடுத்த மாதம் இங்குத் திருவிழா தொடங்கு கிறது. நீயும் உன் தங்கை தமிழ்ச்செல்வியும் அப்பாவுடன் வந்து சேருங்கள்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள மாமன்,
அம்பலவாணன்

முகவரி:
செல்வன் முருகானந்தம்
'தமிழகம்'
2, வரகநேரி கடைவீதி,
திருச்சிராப்பள்ளி–8.

பயிற்சி

தெரிந்துகொள்:

கடிதம் எழுதும்போது அதில்: (1) எழுதுபவரின் முகவரி (2) கடிதம் எழுதப்படும் நாள் (3) தொடக்கம் (4) செய்தி (5) முடிப்பு (6) கையெழுத்து (7) கடிதத்தைப் பெறவேண்டியவரின் முகவரி ஆகிய ஏழும் அமைந்து இருக்கவேண்டும். இவை எங்கெங்கே எழுதப்பட வேண்டும் என்பதைக் கவனி.

அழைப்புக் கடிதம், விண்ணப்பக் கடிதம் முதலான பிற கடிதங்களையும் எழுதப் பழகிக்கொள்.

## 27. சாலை ஒழுங்கு

[உலாப் போதல்]

**கண்ணன்:** ஐயா, அதோ ஒருவர் தெருவில் நடப்பவர்களை எல்லாம் ஓரமாக மேடையில் ஏறிப் போகும்படி கூறுகிறாரே! ஏன் அவ்வாறு போகச் சொல்லுகிறார்?

**ஆசிரியர்:** கண்ணா, வண்டிகள் எல்லாம் நடுத்தெருவில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆதலால் அவர் மக்களை ஓரமாக மேடையில் ஏறிப் போகும்படி எச்சரிக்கை செய்கிறார்.

**வேலன்:** வீதிகளில் எல்லா இடங்களிலும் மேடைகள் இல்லையே!

**ஆசிரியர்:** மேடைகள் இருக்கும் இடங்களில் மேடைகளின் மீது தான் செல்லவேண்டும். மற்ற இடங்களில் வீதியின் ஓரமாக நடந்து செல்லவேண்டும்.

**கமலம்:** ஐயா, அதோ பாருங்கள். ஐயோ, பாவம். அந்த மனிதர் மேலே அம் மோட்டார் இந்நேரம் ஏறியிருக்கும். இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது ஐயா?

**ஆசிரியர்:** அதுவா! அந்த மனிதர் வீதி ஒழுங்கைக் கவனித்து நடக்கவில்லை. வீதி

ஒழுங்கைக் கவனித்து சாலையின் ஓரமாக நடக்கா விட்டால் தீங்குதான் நேரிடும்.

முருகன்: வீதிகளில் எந்த ஓரமாக நடக்க வேண்டும்?

ஆசிரியர்: வண்டிகள் எல்லாம் இடப்புற மாகவே ஓடிவரும். ஆகையால், வலப்புற ஓரமாக நடப்போமானல் எதிரே வரும் வண்டிகளைப் பார்த்து நடக்கமுடியும். நாம் சாலைகளில் நமது வலப் புறமாக ஓரத்தில் நடந்து போகவேண்டும். சில நகரங்களில் மனிதர்களை இடப் புறமாக நடக்கும்படி அதிகாரிகள் கூறுகின்றார்கள்.


வள்ளி: இந்தப் பக்கத்தில் சென்ற வண்டி கள் ஏன் திடீரென்று நின்றுவிட்டன?

ஆசிரியர்: அதோ பார். அங்கே ஒரு ஊர்க்காவலர் கையைத் தூக்கித் தடைசெய்கின்றார் பார். அதனால்தான் வண்டிகள் நின்றுவிட்டன. அவர் வண்டிகளைப் போகும்படி அனுமதித்தால் தான் வண்டிகள் போகவேண்டும்.

பழனி: ஐயா, வண்டிகளுக்கு எவ்விதம் அடையாளம் காட்டுவார்?

ஆசிரியர்: அவர் காட்டும் அடையாளத்தைப் பார். ஒரு கையைத் தூக்கி எதிரே வரும்

வண்டிகளைத் தடை செய்து காட்டுகிறார் அல்லவா? அப்பொழுது அப்பக்கத்தில் வண்டிகள் வரவும்



கூடாது; போகவும் கூடாது. மற்றொரு கையைப் பார். நீட்டியிருக்கிறார் அல்லவா? அந்தப் பக்கங்களில் வண்டிகள் போய்வரலாம். இவ்வாறு அவர் பக்கங்களை மாற்றி மாற்றிக் கையைத் தூக்கியும் நீட்டியும் காட்டி வண்டிகளுக்கு வழி விடுவார்.

**வேலன் :** இதோ பாருங்கள். அவர் அந்தப் பக்கம் திரும்பி நம் பக்கமுள்ள வண்டிகளுக்கு வழி விடுகிறாரே! வண்டிகளும் போகின்றனவே.

*ஆசிரியர்:* ஆமாம் இப்பொழுது நம் பக்கமாக மேலும் கீழும் போய் வருவதற்கு அனுமதி தந்திருக்கிறார். ஆகையால் நாம் இப்பொழுதே இந்த வீதியைத் தாண்டி அந்தப்பக்கம் போய் விடுவோம். நாம் எப்பொழுதும் வீதிகள் கூடுமிடங்களில் இவ்வாறு கவனித்துத்தான் நடக்க வேண்டும். அதன்படி நடந்தால் விபத்துக்கள் உண்டாகாது.

**பிள்ளைகள்:** ஐயா, நாங்கள் இனிமேல் வீதி ஒழுங்கைக் கவனித்தே சாலையில் நடக்கின்றோம்.

*ஆசிரியர்:* ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும். வாருங்கள் போவோம்.

[போகிறார்கள்]

| | | |
|---|---|---|
| எச்சரிக்கை | நிலைமை | நகரங்கள் |
| நடுத்தெரு | ஒழுங்கு | அதிகாரி |
| ஓரமாக | தீங்கு | திடீரென்று |
| அனுமதி | அடையாளம் | விபத்து |

பயிற்சி

***வினாக்கள்:***

1. வீதிகளில் நடப்போர் கவனிக்க வேண்டிய விதிகளை எழுது.

2. ஏன் நாம் சாலைகளில் வலப் புறமாக நடக்க வேண்டும்?

---

# 28. நாட்குறிப்பு

நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் சில நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. நாம் அவற்றை அவ்வப்போது மறந்து விடுகின்றோம். அவற்றை நாம் ஒரு நோட்டுப் புத்தகத்தில் தேதி வாரியாகக் குறித்து வைத்திருந்தால், அது பிறகு நமக்கு நன்மையைத் தரக்கூடும். ஆகையால் நீங்கள் இப்பொழுது முதல் அவ்விதமான குறிப்பை எழுதப் பழகுங்கள். மாணவன் ஒருவன் எழுதி வைத்திருக்கும் நாட்குறிப்பைக் கீழே காணுங்கள்.

1—8—57 வியாழன். ஆடிக்காக அக்காள் அத்தானுடன் ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள். வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தோம்.

2—8—57 வெள்ளி. இன்று ஆடி பதினெட்டாம் நாள். நாங்கள் அனைவரும் காவிரி யாற்றிற்குச் சென்றோம். ஒரு பையன் நீரில் முழுகி விட்டான். அவனை அண்ணன் தூக்கிக் கரை சேர்த்தார். சமயத்தில் உதவி.

3—8—57 சனி. பாடசாலைக்குச் சம்பளம் கட்டினேன். இரசீது எண் 367.

4—8—57 ஞாயிறு. இன்று பள்ளிக்கூட விடுமுறை. எங்கள் ஊரில் நடந்த 'கட்ட

பொம்மன்' நாடகத்திற்கு நானும் அத்தானும் அக்காளுடன் சென்றோம்.

5—8—57 திங்கள். அக்காளை அழைத்துக் கொண்டு அத்தான் ஊருக்குச் சென்றார். எனக்கு ஒரு பேனா பரிசளித்தார்.

## பயிற்சி

***செய்முறை :***

உங்கள் ஊரில் நாட்குறிப்புப் புத்தகம் (டயரி) புத்தகக் கடையில் விற்கப்படுவதைக் கவனி. உனக்கும் ஒன்று வாங்கிக்கொள். மேலே காட்டியவாறு சுருக்கமாக நாட் குறிப்புக்களை எழுதப் பழகிக்கொள்.

உன்னைப்பற்றிய விவரங்களை எழுதி வைத்துக்கொள்:

பெயர் ... .... .... ... .... ...
தகப்பனார் பெயர் ..., ... ... ...
பிறந்த நாள் ... ... ... .... ....
உயரம் ... ... ... நாள் ... ... ....
நிறை ... .... ... நாள் ... .... ...
இருப்பிடம் .... ... ... ... ... ... ...
படிக்கும் வகுப்பு ... .... ... .... ... ...
பாடசாலையின் பெயர் ... .... ... ... ...
கையெழுத்து ... .... .... ... நாள் ... ...

---

# 29. பழமொழிகள்

நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் பல பழமொழிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவை நம் முன்னோர்கள் தாம் கண்டறிந்த அனுபவங்களின் பயனைகத் தோன்றியவை. நெடுங்காலமாக அவை வழங்கப்பட்டு வருகின்றன. அதனால் அவை பழமொழிகள் என வழங்கப் படுகின்றன.

'இளமைப் பருவந்தான் கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம். அப்பொழுது கற்றவை நம்மை விட்டு நீங்கா' என்பது நம் முன்னோர்கள் கண்ட உண்மை. இதை விளக்கவே 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்ற பழமொழி வழங்கப் படுகிறது. இப்படியே ஒவ்வொரு பழமொழியும் சில உண்மைகளைக் காட்டுகின்றன. அவற்றுள் சில பழமொழிகளைக் காணுங்கள்.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.
3. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
4. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
5. ஈயார் இருந்தென்ன.; எட்டி பழுத்தென்ன?
6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
7. எறும்பூரக் கல்லுந் தேயும்.
8. ஒன்றே செய்யினும் நன்றே செய்.

9. காலை மாலை நூலை ஓது.
10. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
11. கெடுவான் கேடு நினைப்பான்.
12. யானைக்கும் அடி சறுக்கும்.
13. மனக் கவலை பலக் குறைவு.
14. அதிக ஆசை அதிக நஷ்டம்.
15. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

| | | |
|---|---|---|
| அதிகம் | அடக்கம் | எட்டி |
| தேயும் | உள்ளளவு | பலம் |
| சிலை | தூற்றி | நஷ்டம் |

பயிற்சி

*1.* ***வினாக்கள் :***

1. மனத்தின் தன்மையை எது காட்டும் ?

2. உதவி செய்தவரை மறக்கக் கூடாது; சமயங் கிடைத்த பொழுதே காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும்; முயற்சி வேண்டும்—இக்கருத்துக்கள் அடங்கிய பழமொழிகளைக் கூறு.

3. உனக்குத் தெரிந்த வேறு சில பழமொழிகளைக் கூறு.

**2. *மொழிவளம் :***

கமலம் கடைக்குச் சென்று, புத்தகம் வாங்கினாள். இந்த வாக்கியத்தில் கமலம் கடைக்குச் சென்று, என்பது ஒரு பிரிவாகவும், புத்தகம் வாங்கினாள் என்பது மற்றொரு பிரிவாகவும் இருக்கிறது. இவ்வாறு ஒரு வாக்கியத்தில் ஒரு கருத்து முடியும் இடத்தில் சற்று நிறுத்த வேண்டும். அதற்கு (,) இவ்விதமாகக் குறிப்பிடவேண்டும். இதற்குக் 'கமா' என்று பெயர்.

# 30. குமண வள்ளல்

[நடித்தல்]

காட்சி — 1

*சாத்தனூர்* : அரசே! குமணவள்ளலைத் தேடிக் கொண்டு வந்தோம். ஆனால், அவர் காட்டிற்குச் சென்றுவிட்டாராம். நம் துன்பம் நம்மை எங்கும் தொடர்ந்தே வருகின்றது. [தூரத்தில் பார்க்கிறார்] அதோ! ஒருவர் போகிறாரே! அவர் குமண வள்ளலாகத்தான் இருக்கவேண்டும். போய்ப் பார்ப்போம். [போகிறார்]

காட்சி — 2

*சாத்தனூர்* : அரசே, வணக்கம்.

*குமணன்* : ஐயா, வாருங்கள். தாங்கள் யாரோ ?

*சாத்தனூர்* : அரசே! நான் ஒரு புலவன். என் பெயர் சாத்தனூர். வறுமையால் வாடு கின்றேன். நான் உணவுண்டு இரண்டு நாட்கள் ஆகின்றன. என் மனைவியும் மக்களும் பசியால் வாடுகின்றனர். தங்கள் கொடைத் திறனைக் கேள்விப்பட்டேன். அதனால் தங்களைக் காண வந்தேன்.

**குமணன் :** அப்படியா! ஐயோ, பாவம், உங்களைப் பார்க்கும்பொழுதே என் மனம் உருகு கின்றது. நான் மன்னனாக இருக்கும் அந்தக் காலத்தில் நீங்கள் வந்திருந்தால் எவ்வளவோ செய்திருப்பேன். இப்பொழுது வந்திருக்கிறீர்கள். என்ன செய்வது? [சற்று யோசிக்கிறார்]. ஆம். அதுதான் சரி. என் அருமைத் தம்பி என் தலைக்குப் பெரும் பொருள் தருவதாகத் தெரிவித் திருக்கிறான். இதோ, என் உடைவாள். தாங்கள் இதனால் என் தலையை வெட்டிக்கொண்டு போய் என் தம்பியிடம் கொடுங்கள். அவன் நிறையப் பொருள் தருவான். உங்கள் வறுமையும் ஒழியும். [வாளை நீட்டுகிறான்.]

**சாத்தனார் :** [பதைபதைத்து வாளை வாங்கு கிறார்.] அரசே என்னகாரியம் இது. இப்படியும் உண்டா? இப்போது எனக்குத் தலைவேண்டாம். தாங்கள் இங்கேயே இருக்கவேண்டும் இதோ வருகிறேன். [புலவர் விரைவாகச் செல்லுகிறார்.]

காட்சி 3

[புலவர் வாழைத்தண்டினால் குமணன் தலையைப்போல் ஒரு தலை செய்துகொண்டு இளங் குமணன் சபையை அடைகிறார்.]

**இளங்குமணன் :** [அண்ணன் தலையைக் கண்டு] ஐயா, இது என்ன கொடுமை ?

புலவர்: ஏன்? நீர் உமது அண்ணன் தலையை வேண்டும் என்றீர்; கொண்டு வந்தேன். நீர் தெரிவித்தபடி பொருளைக் கொடுங்கள்.

இளங்குமணன்: ஐயோ! அண்ணா! நீங்கள் பொருளைத்தான் புலவர்களுக்குக் கொடுத்தீர்கள் என்று நினைத்தேன். இப்பொழுது தலையைக் கூடக் கொடுத்து விட்டீர்கள். பாவியாக நான் உங்கள் பெருமையை அறியாது போய்விட்டேன். [அழுகிறான்]

புலவர்: உடன் பிறந்தவரல்லவா? தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்.

இளங்குமணன்: ஐயா, புலவரே! என் தமையனை வெட்டிய வாளால் என் தலையையும் வெட்டி விடுங்கள். நான் என் தமையனுக்குப் பிறகு உயிர் வாழமாட்டேன்.

புலவர்: இளவரசே வருந்த வேண்டாம். உன் தமையனார் இறந்துவிடவில்லை. உயிருடன் இருக்கின்றார்.

இளங்குமணன்: அப்படியா! எங்கே? அண்ணனைக் காட்டுங்கள். [வணங்குதல்]

காட்சி — 4

**இளங்குமணன்:** [குமணன் காலில் விழுந்து] அண்ணு என்னை மன்னிக்க வேண்டும். [அழுகிருன்]

**குமணன்:** தம்பி எழுந்திரு. என் இவ்வாறு அழுகின்ருய்? வா போகலாம்.

**புலவர்:** தலையைத் தந்த வள்ளலே வாழ்க.

[எல்லோரும் போகிருர்கள்]

பயிற்சி

**செயல்முறை:**

இதனை வகுப்பில் நடித்துப் பழகுக.

**மொழிவளம்:**

புலவர் குமண வள்ளலைப் பார்த்து "அரசே! நான் ஒரு புலவர்" என்று கூறினர். இந்த வாக்கியத்தில் "அரசே! நன் ஒரு புலவர்" என்பது புலவர் கூறிய சொல் ஆகும். இவ்வாறு ஒருவர் கூறிய சொற்களை, அவர் கூறும் முறையிலேயே, ஒரு வாக்கியத்தில் எடுத்துச் சொல்லும்பொழுது "........." என்று இவ்விதமாகக் குறிகள் இடுதல் வேண்டும்.

---

# 31. வெற்றி வேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.

2. கல்விக்(கு) அழகு கசடற மொழிதல்.

3. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

4. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

5. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

6. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.

7. சிறியோர் பெரும்பிழை செய்தனர் ஆயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

8. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

9. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.

10. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியில் கற்ருேரை 'மேல்வருக' என்பர்.

11. வித்தும் ஏரும் உளவாய் இருப்ப
எய்த்தங்(கு) இருக்கும் ஏழையும் பதரே.

12. தன்னு யுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கையில் கொடுக்கும் பேதையும் பதரே.

13. குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்.

14. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்(து)அரசு ஆளினும் ஆளுவர்.

15. குன்றத் தனைஇரு நிதியைப் படைத்தோர்
அற்றைப் பகலே அழியினும் அழிவர்.

16. பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

17. மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

—அதிவீரராம பாண்டியன்

# 32. மூதுரை

1. நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

3. அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

4. நீர்அளவே ஆகுமாம் நீர்ஆம்பல்; தான்கற்ற
நூல்அளவே ஆகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்(து)அளவே ஆகும் தாம்பெற்ற செல்வம்
குலத்(து)அளவே ஆகும் குணம்.

5. நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றேஎ—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

6. தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே; — தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.

7. நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

8. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்(பு)அறிய
மாட்டா தவன்நல் மரம்.

9. கான மயில்ஆடக் கண்டிருந்த வான்கோழித்
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

10. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்(கு) ஆகாரம் ஆனாற்போல்-பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

11. அடக்கம் உடையார் அறிவிலர்என்(று) எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வரும்அளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

12. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

13. நற்ரு மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போ
கற்ருரைக் கற்ருரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் ; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

14. மன்னனும் மா(சு)அறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்ருேன் சிறப்புடையன் — மன்னற்கு
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லை கற்ருேர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

15. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவை
ஆந்தனையும் காப்பார் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

—ஔவையார்

TB 03(2) N68
137648

384
9-4-64-८